திரிலோகசஞ்சாரி
நாரதர்
மலர் 1
இதழ் 12
2021
உன்னதஅறிவிற்கான ஆன்மிகஇதழ்

வாழிய குரு கௌராங்கர்
ஓம்

திக்கெட்டும் ஹரிநாமம் ஒலிக்கட்டும்

உலகெங்கும் உள்ள தமிழறிந்த பெருமக்கள் அனைவருக்கும் என் உள்ளம் நிறைந்த வணக்கங்களைப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஜெய ஸ்ரீ கிருஷ்ண சைதன்யபிரபு நித்யானந்த
ஸ்ரீ அத்வைத கதாதர ஸ்ரீ வாஸாதி கௌர பக்த விருந்தா

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே

வாஞ்சா கல்பதருப்பஸ்ய கிருபா ஸிந்துப்ய ஏவச
பதிதானாம் பவனேப்யோ வைஷ்ணவேப்யோ நமோ நம:

நிலையிழந்த ஆத்மாக்களிடம் தயை நிறைந்தவர்களும் கற்பக மரங்களைப் போன்று அண்டியவர்களின் விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றுபவர்களான வைஷ்ணவர்களின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிக் கொள்கின்றேன்.

“இன்பம்” யாருக்குத்தான் தேவையில்லை! ஜீவர்கள் அதாவது உயிர்வாழிகள்; அவ்வாறெனில் உயிரோடு உடலில் வாழ்பவர்கள் எனும் பொருளில் நான் குறிப்பிடவில்லை. தேகம் தெரிந்து தேவைகள் தேடி தீனி போட்டு வாழ்வு என்று சொல்லிக் கொள்ளும் நம் இன்பம் எவைகள்? அவைகளை நம்மால் நம்மிடம் தக்க வைத்துக் கொள்ள இயலுமா? வெறுமனே உடலில் இருப்பது வாழ்வதாகாது. ஆனந்தத்தை யாரொருவர் தக்க வைத்துக் கொள்கின்றார்களோ அவர்கள் மட்டுமே “உயிர்வாழி” எனும் பொருளில் நான் குறிப்பிடுகின்றேன். நீண்ட வாழ்நாட்களைக் கொண்டவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு விஷயம்தான் “மெய்ஞானம்.” இதுதான் விஞ்ஞானம் என்கின்ற தற்காலிக வாழ்வில் துணைவரும் தொல்லை.

உயிர்களுக்கு தண்ணீர் தேவை இருக்கின்றது. அதை மதித்துக் காத்து அனுபவிக்கச் சொல்லித்தரும் உன்னத ஆற்றல் உள்ள அறிவு மெய்ஞானம்.

அபகரித்து அழித்து அனுபவித்து அடுத்த தலைமுறைக்கு இல்லாமல் போவதைப் பற்றி அக்கறையில்லாத பண்பற்ற பகுத்தறிவு விஞ்ஞானம்.

தேகம் சடலமானதும் அதை அப்புறப்படுத்திவிட்டு நீர்நிலைகளை நாடும்போது தொடங்கும் தண்ணீர் தேவையானது; அடுத்தநாள் அந்த தேகச்சாம்பலை கரைக்கவும், அடுத்தடுத்து "சிரார்த்தம்" செய்ய (நீர்க்கடன் செலுத்த) தொடங்கியதிலிருந்து மீண்டும் தேகம்விட்டுப் போகும் வரை தொடர்கின்றது. மேலும் "பிறந்தஉடன்" இறந்த வீடு தீட்டு எப்படியோ அதேமாதிரி பிறந்த வீடும் தீட்டு. இறப்பும் பிறப்பும் இருக்கட்டும். வாழும்போதுமட்டும் என்ன வாழுதாம். கிரஹ தோஷம்; கங்காஸ்நானம் மற்றும் புனித நீர் நிலைகளைத் தேடித் தேடி அலைகின்றதே வாழ்க்கை. இருக்கிற கிரஹங்கள் எல்லாவற்றுடனும் தோஷம். அது தீர வழி! புனித நீரில் குளி. இவ்வளவு முக்கியமான தண்ணி படற பாடு; இப்படி நம்மைத் தூய்மை செய்யும் தண்ணீரையே தூய்மையற்றதாகச் செய்யும் நம்மை நமது அடுத்த தலைமுறை மன்னிக்கவே மன்னிக்காது. தண்ணீரை மட்டுமா காற்றையும் விட்டுவைக்கவில்லை.

காலங்காலமாக பாரதத்தின் மாண்புகளை மாசுபடுத்தும் கயவர்கள் அந்நிய நாட்டினர்கள், அவர்கள் பொறாமையாலும் பேராசையாலும் நம்மை பகைவர்களாகக் கண்டார்கள். நம் காலத்தில் நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களே பகைவர்களின் பக்கம் இருந்து சொந்த நாட்டுக்கும், நமது வேத இலக்கிய பண்புக்கும் பங்கம் விளைவிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

ஜாதி, மத, மொழி துவேஷங்களை வளர்த்து வளர்த்து; பார் உனக்கு இவைகளால் எவ்வளவு கொடுமை நடக்கின்றது; அதனால் அவைகளை அழித்துவிடு என்று சொல்லி சொல்லி நாகரீகத்தையே அழித்துவிட்டார்கள். எந்த ஜாதித்தலைவனும் தன் மக்களை வாழ வைத்தானில்லை. அவர்கள் தோளில்தான் சவாரி செய்கின்றான். எந்த மதமும் மனிதனை மிருகமாக்கவேயில்லை. இறையச்சம் இல்லாதவன்தான் மிருகஉணர்வில் மனிதவடிவில் வாழ்கின்றான். இவன்களுக்கு ஏன் மதச்சாயம்? எந்த மொழியும் மொழிபெயர்ப்பு இலக்கிய பரிமாற்றம் இல்லாத பரிணாம வளர்ச்சியை அடைவதில்லை. ஸ்ரீ மத் பகவத்கீதை ஆங்கில மொழி பெயர்ப்பினால் ஆங்கில மொழியினர் அவர்கள் பல்கலைகூடத்தில் பாடமாகவே ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். நம் முன்னோர்களை இறையுணர்வு, மனித நேயம் இல்லாதவர்களாகச் சித்தரிக்கும் அயோக்கியர்களால் நாம் சிதைக்கப்பட்டோம். சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எந்த ஒரு மாணவனும் அரசு அதிகாரியாக பதவியேற்க ஆசைப்படும்போது அயோக்கியத் தனமாக வாழ விரும்புவதில்லை. நம்மை ஆளட்டும் என்று தேர்ந்தெடுத்து ஆட்சி பீடத்திற்கு அனுப்பிவைக்கின்றோமே அவர்கள்தான். நம் பிள்ளைகளை சோரம் போகச் செய்கின்றனர்.

3:28 ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகின்றார் அர்ஜுனனிடம் தோள்வலி படைத்தவனே! குணங்கள், கருமங்கள் இவைகளின் பாகுபாட்டை நன்கறிந்தவனோவெனில் காரண குணங்கள் காரிய குணங்களில் இருக்கின்றன என்று அறிந்து அவைகளின் மீது பற்றுதல் கொள்வதில்லை.

3:29 பிரகிருதியின் குணங்களால் அதிகமாக மயக்கமடைந்தவர்கள் குணங்களுடைய கருமங்களில் பற்று கொள்கின்றார்கள். அத்தகைய அரைகுறை ஞானமுள்ள மந்த புத்திகளை அறிஞன் கலைக்கக்கூடாது.

ப்ரக்கு தேர்குண ஸம்மூடா: ஸஜ்ஜந்தே குணகர்மஸீ
தா நக்ருத்ஸ்நவிதோ மந்தாந் க்ருத்ஸ்நவிந் ந விசாலயேத்

திரிலோக சஞ்சாரி
நாரதர்

ஸ்ரீ கிருஷ்ணர் தோள்வலிமையுள்ளவனே என்று அழைப்பது; அடுத்தவனை அழிப்பதோ, சுமப்பதோ வலிமை என்கின்ற பொருளில் சொல்லவில்லை. நமது சொந்தகுணங்களையும் அதனால் ஏற்படும் கருமங்களையும் காரண காரியங்களையும் கண்டறிந்து ஆசையெனும்; மூடத்தனமின்றி கடமையாற்றும் வலிமை தோள்வலிமை என்கின்றார்.

இயற்கையின் வசீகரத்தில் மயங்கியவர்கள் குணங்களின் கருமங்களில் பற்று வைக்கின்றனர். இத்தகைய ஞானசூன்யங்களின் அறிவிற்குள் நாம் ஞானத்தை வைக்கமுடியாது. அவர்கள் அப்படியே இருக்கட்டும். தானாகவே காணாமல் போய்விடுவார்கள். "ப்ரக்ருதே ஸம்மூடா" பிரக்ருதி என்கின்ற அன்னை துர்கை, பாரத மாதா, இயற்கையெனும் அன்னை மாயாவின் குணங்களின் கர்ம பலனில் கட்டுண்ட அவர்களால் நம்மை நாம் இழக்கக்கூடாது. விரும்பிய மொழிகளையெல்லாம் கற்போம். மதங்களின் மாண்பு காப்போம். விண்ணுலகமும் வணங்கும் இம் மண்ணுலகமே நம் பொன்னுலகம்.

இன்னும் யோசிப்போம்.

நம் எதிர்காலத் தலைமுறையினர்க்காக;
நமக்கு வாழ்ந்துகாட்டி வாழ்வளித்த மூத்தவர்களிடம் யாசிப்போம்.....

என்றென்றும் நன்றியுடன்



ஆசிரியர்.

இந்த இதழில்....

வையந்தகளியாய்......
திவ்ய பிரபந்தம் எனும் தமிழமுது தரும் பொழுதுகள்.
இறைவனைக் கண்ணாரக் கண்டவர்களின்
கதை. எல்லாவிதமான பக்தர்களின்
வாழ்வு நிகழ்வுகள் எல்லாம் ஒரேமாதிரித்
தானிருக்கிறது என்று அலட்சியம் வேண்டாம்.
கடவுளுடன் நட்புக்குள்ளிருக்கும் வாழ்வு
நமக்கானதாய் இருக்கட்டும்.

நமக்கு வந்த வாழ்வுதான்.
குருக்ஷேத்திர போருக்குப்பின்பு பாரதம் பெற்ற
உன்னத வாழ்வும். உலகையே கட்டிக்
காக்க 'தருமன்' அரசுரிமை ஏற்றதும்.

என்னிலிருந்து வேறாக.....
தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்ள
துணைவரும் ரூபனின் டைரி.
நம்மைப் போன்ற ஒரு சாமானியனின் வாழ்வில்
ஹரேகிருஷ்ணா....மகாமந்திரத்தின் பங்கேற்பினால் ஏற்படும் ரசவாதம்.
உலோகத்தை பொன்னாக மாற்றும் அற்புதம். இந்த குறிப்பிட்ட உதாரணம்;

திரிலோக சஞ்சாரி
நாரதர்

பௌதிக ஆசைகளும் ஆன்மீக வளர்ச்சியும் இணைந்து செல்லக்கூடியவை அல்ல என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக......

நிச்சயம் என்றேனும் ஒருநாள்......

ஏதேனும் ஒரு ஜன்மத்தின் வாழ்நாட்களில் என்றேனும் ஒரு நாள், ஒரு நேரம் உடல் கொண்ட புலன் புத்தியில் நான் தனவந்தன், தரித்திரன், அதிகாரி, அடிமையென்றெல்லாம் அபிப்பிராயப்படும் பிரயாசை நீங்காமலா போய்விடும்?

முகில்வண்ணன் பேர் பாட.....

ஸ்ரீ மதி ஆண்டாள் நாச்சியார் அருளியது.
ஹரி நாம ஜபம் நமக்குத்தரும் பலம் பற்றிய
சுகமான வர்ணணை.

ஹரே கிருஷ்ணா....

வரைகலை: Dr. P. கோகிலா M.D(s).

அச்சுக்கலை: B. விவேகானந்தம்,
ஜே.வி. ஆப்செட் பிரிண்டர்ஸ்,
795, மலையடிப்பட்டி,
இராஜபாளையம்.

வாசகர் கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி:

மா. மதிவாணன்
தபால் பெட்டி எண்: 25
141, நேதாஜி ரோடு,
ஸ்ரீ வில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்,
தமிழ்நாடு, இந்தியா.

வெளியீடு: SMART,
Sri Mahavana Rural Trust,
Rajapalayam.

ஆசிரியர்: மா. மஹாவனதாஸ்.



திரிலோக சஞ்சாரி
நாரதர்



வையந்தகளியாய்....

** அன்பேதகளியா ஆர்வமேநெய்யாக
இன்புருகுசிந்தையிடுதிரியா * நன்புருகி
ஞானச்சுடர்விளக்கேற்றினேன் நாரணற்கு*
ஞானத்தமிழ்புரிந்தநான்.

- பூதத்தாழ்வார் அருளியது.

** திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் * திகழும்
அருக்கன்அணிநிறமும்கண்டேன் * செருக்கிளரும்
பொன்னாழிகண்டேன் புரிசங்கம்கைக்கண்டேன்*
என்னாழிவண்ணன்பால் இன்று.

- பேயாழ்வார் அருளியது.

திரிலோக சஞ்சாரி
நாரதர்

ஜெய்குருதேவ்

திவ்யபிரபந்தம்

எனும் தமிழமுது நமக்கு தரும் பொழுதுகள்

"இருடிகேசனே! உன்னுடைய மகிமையைக் கீர்த்தனம் செய்வதனால் உலகம் மகிழ்ச்சியடைகின்றது. அதில் ஆசையும் கொண்டுள்ளது. ராக்ஷஸர்கள் பயத்தால் திக்குகளை நோக்கி ஓடுகின்றார்கள். சித்தர்கள் கூட்டங்கள் எல்லாம் உன்னை வணங்குகின்றார்கள். இது பொருத்தமானதுதான்." - ஸ்ரீ மத் பகவத்கீதையில் அர்ஜுனன்.11:36.

சுயநலமும் பேராசையும் மூர்க்கத்தனமும் நிறைந்த ஒரு அசுரனை கிருஷ்ணர் தன் வயப்படுத்திக் கொள்கின்றான். அவனது துஷ்டத்தனமான அந்த உடலிலிருந்து அவனை அப்புறப்படுத்தி வேறு ஒரு புனிதமான செயல்களுக்கான ஓர் உன்னத உடலைத் தருகின்றான். எளியவர்களும்; தன் ஒரே துணையான கண்ணனையும் தங்களது பசுங்கன்றுகளையும் மட்டுமே நம்பி வாழ்கின்றவர்களுமான யதுகுல சிறுவர்கள் அந்த கேசி என்கின்ற அசுரனை நினைத்து, "அவன் ஏன் இவ்வாறான குணக்கேடான துயரத்தை இன்பமென்று சுமக்க வேண்டும்." என்கிறவிதத்தில் வருந்தினார்கள். தன் பக்தர்களின் துயரத்தை நீக்கவே கண்ணன் அந்த கேசிக்கு ஊண் உடலிலிருந்து விடுதலையளிக்கின்றான். அதனாலேயே அவன் கேசவன் என்று போற்றப்படுகின்றான். அர்ஜுனன் அந்த பெயரைச் சொல்லித்தான் இப்பொழுது கிருஷ்ணனை அழைக்கின்றான். பகவான் கிருஷ்ணனின் எந்த நாமமாக இருந்தாலும் அன்புடன் நிகழ்ந்த நிகழ்வு ஒன்றை நினைவுக்குள் கொண்டுவரும். அதில் நெஞ்சம் நெகிழும். பக்தர்களின் மகிழ்ச்சியும் அசுரத்தனமானவர்களின் பயமும் அர்ஜீனனுக்கு வேடிக்கையாய் இருக்கின்றது. மனித இனங்களும் தாங்களும் பகவானது சித்தத்தின்படி உடல் வாழ்வைத் துய்க்க வழிகண்ட சித்தர்களும் கூட அவரவர் வழியில் பகவானைத் துதிப்பதைக் கண்டு இது பொருத்தமானது தான் என்று உணர்ந்ததைத்தான் பகவானிடமே மனச்சமாதானத்துடன் அர்ஜுனன் சொல்கின்றான்.

"மதிப்பதற்கு என்று ஒரு விஷயம் இருக்கின்றது என்றால் அது நமது மனப்பாங்கில் நாம் எதை ரசிக்கின்றோமோ அதுதான்."

தற்பெருமை பேசித் திரிவதற்கும் தன்னம்பிக்கையுடன் நடமாடுவதற்கும் வேறுபாடு கொஞ்சம் தான்.

தற்பெருமையில்; கேட்பவர்களின் எண்ணங்களினால் பயம் நமக்கு வரும்.

தன்னம்பிக்கையில் பேசினால் கேட்பவர்களின் உள்ளம் பெறும் உவகையில் இருவருக்கும் துணிவு வரும்.

என்றேனும் ஒருநாள் ஒரே ஒரு நாழிகையில்; "தனது மதம் ஆன்மீக

நம்பிக்கை, வாழ்வுத் தேவைகளின் விபரங்கள் எல்லாம் மறந்துவிட்டு நான் என்கிற ஜீவனாகிய நான் தன்னை எப்படியெல்லாம் நடத்திக் கொண்டபடி இந்த உடலில் வாழ்ந்து வந்திருக்கின்றேன்" என்று சிந்தித்தால் கடைவிழியில் கண்ணீர் கசியும். அந்த நாள் ஆயுளில் ஒருமுறையேனும் சிறுதுளி நாழிகையாயினும் ஒருவனுக்கு வாய்த்தால் போதும். ஒட்டுமொத்த வாழ்வும் முழு அர்த்தமுள்ள வாழ்வாகிவிடும். இந்நிகழ்வுக்கு குரு சரணத்தைத் தவிர வேறு கதியில்லை.

யாரை வேண்டுமானாலும் 'குரு'வாக ஏற்பது இன்று ஏமாற்றிக்கொள்ள அனுமதிக்கின்ற வாழ்வின் நாகரீகம் என்றாகிவிட்டது. மக்களிடம் இருக்கும் இந்த வசதிகளைப்பற்றி அறிந்தவர்கள் எல்லாம் "ஜகத் குரு" வாகிவிடுகின்றனர். நடிகர்களும் கூட தன் நிலையறியாத கோமாளிகளாகி மகிழ்ச்சியாக "குரு ஜி" என்றழைக்கப்பட பழகிக் கொள்கின்றனர். அன்னத்தை அள்ளிவாயில் போட்டுக் கொண்டதும் அதில் கல்லைக் கடித்துவிட்டால் வரும் துன்பம் மாதிரி ஒரு மூட குருவைக் காண்பதினால் வரும் மதியிழப்பு.

"ஸ தயாஸ்ரத்தயா யுக்தஸ்
தஸ்யாரத நமீஹதே
லபதே ச தத: காமாந்மயைவ விஹி
தாந்ஹிதாந்"

கீதையில் 7:22.

"சிரத்தையுடன் தேவதைகளை பூஜித்து; நானே அமைத்து தரும் பலன்களை அந்தந்த தேவதைகள் மூலமாக அவன் பெறுகின்றான்."

"தேவதைகள்" என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொல்கின்றவர்கள் யாரென்றால் முப்பத்து மூன்று கோடி பேர்கள் பகவானது கட்டளைப்படி தெய்வங்களாக மதிக்கப்படுகின்றவர்கள். ஸ்ரீல பிரபுபாதா பக்தி சித்தாந்த ஸரஸ்வதிதாகூர் அவர்களின் கூற்றுப்படி சைதன்ய மகாபிரபுவின் அவதார நோக்கத்தை முன்னிட்டு பக்தித்தொண்டுக்காக வாழும் எல்லோரும்தான் சொந்தபந்தங்கள்" அதாவது மக்களை வழிநடத்தும் குருமார்கள்.

எவருடைய; சரணங்களில் தற்காலிக தேகாபிமான சௌகரியங்களில் தன் மனம் மயங்கும் மதியிழப்பு நிகழாமல் காப்பாற்றப் படுகின்றோமோ அத்தகைய சரணங்களில் சரணடைவதே நமது வெற்றி. இனி இகமோ பரமோ எதுவாகிலும் நிச்சயம் நமது "பக்தித் தொண்டு" என்கிற பாத்யதையை இழக்கமாட்டோம்.

"மாமன்னர் குலசேகரன் என்னதான் இந்திர போகமாளும் வகையே கிடைத்தாலும் வேண்டாம். இங்கே உன் கோயில் படியாகவோ, திருக்குளத்து மீனோ ஏதாகிலும் ஆகின்றேன்." என்கின்றார். இதனால் அல்பமானதாயிருந்தாலும் தேகாபிமான வாழ்வை விட்டுவிடுதல் அத்தனை சுலபமில்லையே அது நீர்க்குமிழி ஜன்மமாயினும் நீண்டதல்லவா நமக்கு! நான் என்னசெய்வேன் என்று கலங்க வேண்டாம்.

மாமன்னர் குலசேகராழ்வாருக்கு ஏற்பட்ட துணிவு நமக்கு வராதுதான். நம்மைப் போலவே எளிய "ஸ்ரீ ஜனாபாய்" எனும் பக்தையின் பக்தித் தொண்டு நமக்குத் துணைவரும். நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் இதே கலியுகம்தான் "ஜனாபாய்" வாழ்ந்த காலமும். அன்றைய நாட்களில் நம் பாரதமக்கள் தன்னை நேசிப்பதைவிட அதிகமாய் தன் புலன்களை நேசிக்க வெட்கப்படுவார்கள். செல்வந்தர்களில் எளிமையாக வாழ்பவர்களும்; வறுமையிலும் செம்மையாய் வாழ்பவர்களுமான ஏழைகளாலும் இறை உணர்வு



திரிலோக சஞ்சாரி
நாரதர்

கண்ணியமாகக் காப்பாற்றப்பட்டிருந்த காலம். இன்றும் கூட அம்மாதிரியான ஏழைகளும் செல்வந்தர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். அவர்களால் இன்றைய நிலைமக்களின் மனப்பாங்கிற்கேற்ற வகையில் சும்மா இருக்க முடிகின்றது. சும்மா இருப்பது என்றால்; காற்றில் நோய்க்கிருமி பரவுகிறது! மூச்சு விடாதே! முடங்கிக்கிட! கோவில்களைப் பூட்டிக் கொள்! கூட்டம் சேர்ந்தால் செத்துப் போய்விடுவாய். இந்த மாதிரி கோமாளித்தனமாய் மக்கள் தங்களை ஆள அனுமதிக்கின்றதைப் பார்த்துக் கொண்டு சிவனே என்று சும்மாயிருக்கின்றார்கள். கோவில்களில் யார் வேண்டுமானாலும் அர்ச்சகராகலாம் என அறிவிப்பு. இந்த சௌகரியம் காலம் காலமாக இறைவனால் அனுமதிக்கப்பட்டது தானே! இதில் நாத்திகன் என்ன அனுமதி தருவது!

ஆலயம்; நிர்வாகம் ஆன்மிகம் என்று பிழைப்பு நடத்தும் பிச்சைக்காரர்களால் இப்படி ஒரு நாடகம் அரங்கேறுகிறது. இதையும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கின்றார்கள். இறையுணர்வை தங்கள் இதயத்தில் தக்கவைத்துக் கொண்ட இந்த அடியார்கள் வாளாவிருப்பதால் இறைவன் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கப் போவதில்லை. இந்த பாரதம் அண்ட சராசரங்களை ஆட்டிப் படைத்த பல அசுரத்தனமான அவலங்களை அழித்த வரலாறுகள் இருக்கின்றன.

பெண்ணுக்கும் பூவின் மணத்துக்கும் உள்ள சம்பந்தம் பற்றி விளையாட்டுக்கே பூமிக்கு சாமி வந்த கதையெல்லாம் நம் மனதில் நீங்காத இடம் பெற்றிருக்கின்றன.

மொத்த உலகையும் காக்கும் வலிமையுள்ள பாரதம் மற்றவர்களால் கூட இல்லை, இந்த மண்ணில் பிறந்தவனே கிருமியைக் காட்டி விளையாடிக் கொண்டிருக்கும் அவலம் கூடிய சீக்கிரம் முடிவுக்குவரும். மீண்டும் இறைவன் ஆட்சியில் பாரதம் தலை நிமிரும். கடவுளும் அவரது சட்டங்களும் பாரதத்தின் உயிர் நாடியாக இருக்கின்றதை மாற்றும் ஆற்றல் இப்பிரபஞ்சத்தில் எங்கும் இல்லை.

> “எவனொருவன் தன்சரீரத்திலிருந்து விடுபடும்முன் ஆன்மாவாகிய தன் நிலையை உணர்கின்றானோ அவனே யோகி. அவனே சுகமானவன்.”

இவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணன் கூறினான். இப்படிப்பட்ட யோகக்காரர்கள் நிறைந்த பாரதம் தேவர்களாலும் வணங்கப்படும் நிலை எப்பொழுதும் இருக்கும். பிரமாணம் வேண்டுமா......

இதோ......

“வையந்தகளியாய்” என்கிற ஒரு வார்த்தை உலகையே அகல் விளக்காக்கி கையருகே கடவுளைக் கொண்டுவந்து காட்டிய முதல் ஆழ்வார்கள் மூவரில் முதல்வர்.

* *வையந்தகளியாய் வார்கடலே நெய்யாக*

வெய்ய கதிரோன் விளக்காக*செய்ய

சுடராழியானடிக்கே சூட்டினேன் சொல்மாலை*

இடராழி நீங்குகவேயென்று.

அகிலபேரண்டத்தில் வையம் அகல்விளக்கு; சுடராக சூரியனைச் சுட்டிக்காட்டுகின்றார். ஞானச் சுடராகிய இவ்வைணவப் பெருந்தகை வாயார வாழ்த்துகின்றார். இடராழி நீங்குகவென்று.

அருள்திரு முதலியாண்டான் அவர்கள் பொய்கையாழ்வாரை “கவிஞர் போரேறு” என்றழைக்கிறார்.

ஆற்றல் மிகு ஆச்சார்யார்கள் அருகில் நாம் எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் அவர்கள் பரிவுடன் நம்மை வழிநடத்தியது புரியாமல் அவர்கள் மறைந்த பிறகு படிப்பினையாக நம் வாழ்வு நமக்குப் புரிகின்றது.

திரிலோக சஞ்சாரி
நாரதர்

காஞ்சி மஹா பெரியவரை சுப்பிரமணிய சிவா அவர்கள் சந்தித்த பொழுது பெரியவரிடம் வேண்டிக் கொண்டது; “பாரதம் விடுதலை பெற வேண்டும். மக்கள் தெய்வ நெறியில் வாழ வேண்டும்” என்றதும் பெரியவரே வியந்தும் மனம் உருகியும் சிவாவிடம் “நிச்சயம் என் தினசரி பிரார்த்தனையில் நான் அம்பிகையிடம் வேண்டிக் கொள்கிறேன்.” என்று கனிவுடன் கூறியிருக்கின்றார். இம்மண்ணில் தோன்றி நம்மை வழிநடத்தும் தேசபக்தி தெய்வங்களும் தெய்வநெறியில் தங்களை அர்ப்பணித்த மகான்களுமாய் வாழ்ந்த பூமி நம் பாரத பூமி. தன்னிலை அறியாத அவல வாழ்விற்கு நாம் பழகிக் கொண்டிருக்கும் பேதமையை வெல்ல ஒரே வழி கலியுகத்திற்கென்றே இருக்கும் நாம ஜபம் மட்டும்தான். இறைவனின் பெயரை ஜெபிப்பதால் மட்டுமே நம்மை நாம் தூய்மை செய்து கொள்ள முடியும். கடவுளின் பெயரைத் தொடர்ந்து உச்சரிப்பதனால் அது மந்திரமாகிறது. இந்த முறைக்கு மதபேதமில்லை. காலநேரமில்லை. இடம் பொருள் இல்லை. எந்த நியமனமும் இல்லை. சொல்லவேண்டும் என்கின்ற மனமும் மனிதனாக வாழ வேண்டும் என்கிற விருப்பம் மட்டும் போதும். “சுடராழியானடிக்கே சூட்டினேன் சொல் மாலை. இந்த மாலையை சூட்ட நமக்கு என்னதான் வேண்டும்? நமக்குக் கிடைத்த மானுட வாழ்வு நம்மை வாழ வைக்க வேண்டாமா? வையத்தையே வாழவைக்கும் பாரதத்தில் பிறந்தும், தான் வாழத் தெரியாமல் இருப்பது வெட்கக்கேடு. வயிற்றுப்பாட்டைப் பிழைப்பாக்கும் வாய்க்கரிசி வாழ்வு தேவையா? நம்மைப் பெற்றவள் என்ன பாவியா? அம்மாவைத் தந்த ஆண்டவனின் பெயரைச் சொல்லி நம் சொந்தம் என்னவென்று காண்போம்.

மாலையில் கதிரவன் கண் உறங்கியதும் விளக்கேற்றும் நேரம். வான வெளிச்சமும் விளக்குகளின் வெளிச்சமும் கலந்து புலனுறக்கம் தந்து விழிக்கும் அற்புதம்.

பாண்டுரங்கன் கோவில் கோலாகலம். பக்தர்கள் பலவிதம். அவர்களின் மனம் கவர்ந்த பண்டரிநாதனிடம் பக்தி மட்டும் ஒரே விதம்.

பண்டரிபுரம் கோயிலிலே கார்த்திகை மாதத்து ஏகாதசி விழா.

வைகுந்தா! மணிவண்ணனே! என்பொல்லாத்
திருக்குறளா! - என்னுள் மன்னி
வைகும் வைகல் தோறும் அமுது ஆய
வான்ஏறெ!
செய்குந்தா அரும்தீமை உன் அடியார்க்குத்
தீர்த்து அசுரர்க்குத் தீமைகள்
செய்குந்தா! உன்னை நான் பிடித்தேன்
கொள் சிக்கெனவே.

- நம்மாழ்வார், திருவாய்மொழி.

தென்னகத்தில் வேதங்களையும் தமிழ் வடிவங் காணச் செய்த தெய்வத் தமிழாழ்வார்கள் வாழ்ந்திருந்த அதே காலங்களில்; வடக்கில் ஸ்ரீ ராமதாஸர் மற்றும் நாமதேவர் வாழ்ந்த காலம். பகவான் பாண்டுரங்கனும், ரகுமாயியும் அவரது பிள்ளைகள் போல் மக்கள் அபிப்பிராயம் கொண்டிருந்தனர். நாமதேவரது பக்தியினால் பகவான் பாண்டுரங்கனும் பெருமிதமாய் மகிழ்வார்.

பகவான் நாம கீர்த்தனத்திற்கு முக்கியத்துவம் உள்ள கோவில்களில் பண்டரிநாதன் கோவில்தான் முதலிடம் வகிக்கின்றது. பக்தர்களிடம் வாஞ்சையுள்ள பகவான் நேரடியாக பக்தர்கள் வீடுகளுக்குச் செல்லவும் தயங்கமாட்டார். இந்த அதிசயம் இன்றும் கூட பண்டரிபுரத்தில் ஒவ்வொரு வீட்டிலும் விசாரித்தால் தெரியும். அவரவர் வீடுகளில் எப்படியெல்லாம் உணர்வுகளுடன் பகவான் உறவினன் ஆகியிருக்கின்றார் என்பது.

இப்பொழுது கேவலம் கிருமிகளிடம் மாட்டிக் கொண்டிருக்கும் நமக்கு

அதெல்லாம் வியப்பான விஷயங்கள்.

பண்டரிபுரத்தின் அருகிலிருக்கும் சுற்றுப்புற கிராம மக்கள் ஏகாதசி விழாவிற்கு ஏகபோகமாய் குழுமியிருக்கின்றனர். பாரதத்தின் பண்பு; எல்லா நாட்களும் எங்கேயாவது ஒரு தெய்வீகத் திருவிழாவும்; தெய்வங்களின் வீதி உலாவும் நடைபெறும். உலகின் மற்ற நாடுகளுக்கு ‘கடவுள்’ விஷயம் ஒரு புத்தகச் செய்தி! வாசிப்பது மட்டுமேதான். வசிப்பது அவரவர் ருசிப்படிதான்; உழைப்பும் பிழைப்பும். நம் இந்திய மக்களுக்கு வாழ்வின் ஆதாரம் கடவுள். ஆன்மிகச் செயல் வழியில்தான் செல்வமே! கடவுள் நம்பிக்கையில்லாத களவானிகள் கூட கிடையாது. கல்வியறிவை அழித்து கடவுளாகத் தன்னைக்காட்டிக் கொள்ளும் கயவனையும் நம்பும் மக்கள் நம் நாட்டில்தான். இப்படிப்பட்டவர்களால், நாத்திக முட்டாள்கள்தான் முகமூடியில் மாட்டிக் கொள்ளச் செய்துவிட்டனர். இன்று நம் வாரிசுச் செல்வங்களுக்கு வாழ்வது மட்டுமல்ல விளையாடுவது கூட தெரியாது.

சின்னஞ்சிறுமி! விளையாட்டுக்கும் பகவானையே பள்ளித் தோழனைப் போல் பார்த்து அழைத்துக் கொண்டவள். பெயர் “ஜனாபாய்” தமிழில் வள்ளியம்மாள் பொன்னியம்மாள் என்று பெயர்கள் வழங்குவது போலவே வட இந்தியாவில் ஜனாபாய், மீராபாய், குணாபாய் என்று எளிய விவசாயக்குடும்பங்களில் பெண் பிள்ளைகளின் பெயர்கள் வழங்குவது இயல்பு.

அப்படித்தான் சாமான்ய விவசாயியின் மகள் ஸ்ரீ ஜனாபாய். பெற்றோர்களுடன் பண்டரிபுரம் வரும் பொழுது அவளுக்கு பத்து வயதுக்குள்தானிருக்கும்.

குழந்தைப் பருவம் தான் என்றாலும் வேடிக்கை விளையாட்டுக் குணமில்லை.

பக்தர்கள் கூட்டம் கோவில் நிறைந்து



இருக்க; ஹரி நாம ஸங்கீர்த்தனம் தாள வாத்தியங்களுடன் குதுாகலமாக அனைவரையும் ஆடச் செய்து கொண்டிருக்கின்றது. மக்கள் கூட்டத்தில் மகள் பாண்டு ரங்கனைப் பார்க்கட்டும் என்று ஸ்ரீ ஜனாபாயின் தந்தை அவளைத் தோளில் தூக்கி வைத்திருக்கின்றார். ஸ்ரீ ஜனாபாய் பாண்டுரங்கனைப் பார்க்கின்றாள். குமிழ் சந்தனம் நெற்றியில் திலங்க. இருசெவிகளில் மகர குண்டலங்கள் மிளிர இருகைகளும் இடுப்பில் வைத்தபடி குறும்பாய் சிரிக்கும் விட்டலனைக் கண்டாள் குழந்தை ஸ்ரீ ஜனாபாய். தனது தந்தையிடம் மழலை மாறாத

மொழியில் "அப்பா.... என்னைக் கீழேதான் இறக்கிவிடேன்." தந்தையைச் சுமக்க விட வேண்டாம் என்று விட்டல் தான் சொன்னானோ! யாருக்குத் தெரியும். அப்பா கீழே இறக்கிவிட்டதும் பக்தர்களுடன் ஆடினாள், பாடினாள். சிறுமியின் பக்தி கண்ட பெருமக்கள் பேராவலில் அவளைச் சுற்றியே பாடினார்கள், கொண்டாடினார்கள். கூட்டத்திற்குள் பாண்டு ரங்கனும் சிறுவனாக ஸ்ரீ ஜனாபாயுடன் ஆடியது அவளுக்குமட்டும்தான் தெரியும்.

இறைவன், அன்றல்ல என்றும், ஏன் இன்றும் நம்முடன் என்னவாக நம் அருகில் இருக்கின்றான் என்று உணர வேண்டுமெனில் நமக்கென்ன வேண்டும்?! ஆன்ம உணர்வு தான் வேண்டும். தன்னை உடலாகப் பார்க்கும் குருடனுக்கு ஆன்மாவின் இருப்பை அறிய அறிவு வேலை செய்யாது.

ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனைநான்*
இன்று மறப்பேனோ ஏழைகாள் * அன்று
கருவரங்கத்துள் கிடந்து கைதொழுதேன் கண்டேன்*
திருவரங்க மேயான் திசை.

திருவரங்கமிருக்கும் திசையைப் பார்த்து வணங்கினாலும் கூட நம்மை ஏற்கின்றார் நம் இறைவன். முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணனிடமிருந்து ஜீவனுக்கு கிடைக்கும் அருளாசியே கர்பத்தில் காத்திருந்த நம்மிடம்"என்னை நீயே மறந்தாலும் கூட உன்னிடம் நான் கொண்ட அன்பு மாறாதது" என்பதை உறுதி தருவதுதான்.

கருவிலிருக்கும் போது கடவுள் என்ன உறுதி தந்தார்?

செவி வாய் கண் மூக்கு உடலென்று ஐம்புலனும்*செந்தீ
புவி கால்நீர்விண் பூதமைந்தும் * அவியாத
ஞானமும் வேள்வியும் நல்லறமும் என்பாரே*
ஏனமாய் நின்றாற்கு இயல்பு.

எனது என்று பொய்யுரிமை கொண்டாடும் புலன்களும் அதன் புலம்களும் என்னை நான் விரும்பியபடி பார்த்துக் கொள்ளவேண்டும் என்று உன்னிடமேதான் வருகின்றோம். அந்த ஒரு புத்தியினை நான் அறியாமலே எனக்கு வழங்கியதுதான் அந்த உறுதி.

எண்ணங்களால் நிகழ்வும், நிகழ்வுகளால் எண்ணமும் இன்பமோ துன்பமோ உணர்வுகளைத் தருகின்றன. உணர்வுகளால் மீண்டும் எண்ணங்களும் நிகழ்வுகளும் தொடர்கின்றன. உடல்களும் உறவுகளும் தளர்ந்தும் வளர்ந்தும் நம்மைத் தக்க வைத்துக் கொள்கின்றன. இதில் எல்லாவற்றுக்கும் எங்கே என் இறைவன் அவனே காப்போன், முன்னோன், அறியத்தக்கவன் என்று எதற்காகவாவது எப்பொழுதாவது....

வைகுந்தா! மணிவண்ணனே என்பொல்லாத் திருக்குறளா! என்றழைக்க எல்லோருக்குமா வாய்க்கிறது.

ஸ்ரீ ஜனாபாய்க்கு வாய்த்திருக்கிறது. பகவான் கருவிலேயே கந்தம் கமழும் குழலியுடன் காத்திருப்பேன் என்று உறுதியளித்ததை உறுதியாகப் பற்றிக் கொண்டாள். விட்டலனே எல்லாம்; அன்னை, தந்தை, தோழன் துணைவன் என்று மனதார நம்பினாள். வெறும் ஜடப்புலன் உணர்வுகளை "மனம்" என்று அர்த்தம் செய்து கொள்ளும் அனர்த்தம் பிடித்தவர்களுக்கு புரியாது.

புரிந்தவர்களில்; எல்லா உறவுகளும் உணர்வு களும் என் மனதிலிருக்கும் அதே பரமாத்மாதான் என்றும் புரிந்திருப்பார்கள். அவர்களில் அன்பு எவ்வுயிர்களிடத்தும் உற்ற துணையாகும். உடன் வசிப்பவர்களை உதாசீனம் செய்து உதறிவிட வேண்டிய நிலை வந்தால் அது ஸ்ரீ கிருஷ்ணனைச் சரணடைவதற்காக மட்டுமே இருந்தாக வேண்டும். வேறு எந்தக் காரணத்திற்காகவும் வீட்டை விடுபவர்கள் கடமை தவறியவர்கள்

ஆவார்கள்.

போலித் துறவிக்குப் புகலிடம் கிடைக்காது. இளஞ் சிறுமிக்கு போலித்துறவும் புலனுகர்வும் பரிச்சயமே ஆகவில்லை. அவளது மனமெல்லாம் விட்டலனே நிறைந்து இருக்கின்றான். இவனை இங்கே விட்டால் உயிரை விட்டால்தான் பிடிக்க முடியும். அதுவும் சந்தேகம் தான். இங்கே பொய்யர்களுடன் பொல்லாத நாட்கள் நம்மை கொல்லாமல் விடாது. சாவு எப்படி வரும் என்று தெரியாமலே செத்துப் போவார்கள். இவர்களை நம்பி நம் நம்பியைக் கைவிடலாமா. அவன்தான் நம்மைக் கைவிடமாட்டேன் என்று உறுதி அளித்திருக்கின்றானே தவிர நான் அவனை சரணடைவேன் என்று உறுதி அளிக்கவேயில்லை. ஸ்ரீ ஜனாபாய் தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டு தந்தையிடம் அவள் பேசவில்லை. உள்ளத்தில் பாண்டுரங்கன் இருக்கின்றான். “அப்பா நான் நலமாக, மகிழ்வுடனும் மரியாதையுடனும் எப்பொழுதும் பாதுகாப்புடனும் இருக்க வேண்டும் என்பதில் உனக்கு ஆட்சேபனை இல்லையே....?” என்கிறாள். தகப்பனுக்குத் திகைப்பு! உண்மைதான். ஜனா சொல்கின்ற பாதுகாப்பை என்னால் எப்படித் தரமுடியும்? கண்ணனைத் தவிர; கர்மபந்தங்களால் மகிழ்வும், மரியாதையும் எப்படித் தர முடியும். ஸ்ரீவிட்டலன் இந்தச் சிறுமியிடம் ஏதோ வாஞ்சையைக் காட்டுகின்றான் என்று புரிந்தது. அதை அவளே சொல்லட்டும் என்று, “ஏனம்மா? பாண்டுரங்கன் நம்மைப் பாதுகாக்க இருக்கின்றான் என்பதால் பயமேனம்மா?”

பாண்டுரங்கனைப் போலவே ஆயிரம் அர்த்தங்கள் உள்ளடக்கிய புன்னகை சிறுமி ஜனாபாயிடம். அவர் இருப்பார், நாம் இருப்போமா? சேர்ந்தேதான்!

“இருப்போமா அப்பா”, மணிக் கணக்கில் நாம கீர்த்தனம் செய்து



பகவான் பாண்டுரங்கனின் நேசத்தில் நெஞ்சம் நிறைந்து நெகிழ்வுடன் இருந்த அனைவருக்கும் தெளிவாக இந்தச் சிறுமியின் பேச்சு ஞான விழிகளை திறந்தது. அத்தனை மக்களின் முன்பாக ஸ்ரீ ஜனாபாய் ஒரே குரலில், “நான் பாண்டுரங்கனை விட்டு ஊருக்கு வரமாட்டேன். இங்கேயே இருந்து கொள்கின்றேனப்பா....... உங்களால்தான் பகவத் பக்தி எனக்கு வாய்த்திருக்கின்றது அதை நீங்களே பறித்துவிடாதீர்களப்பா..

“என்னால் உங்களுக்கு எந்த அபராதமும் வராது.”

திரிலோக சஞ்சாரி
நாரதர்

"உங்களுக்குத் தெரியாதா விட்டலனை?"

ஓங்கி உலகளந்தவனை ஸ்ரீ ஜனாபாய் ஓங்கி அழைத்தாள். உற்ற தகப்பனுக்கும் ஊர் ஜனங்களுக்கும் உள்ளே ஒரு குரல் பெண்பிள்ளையாயிற்றே நாளை பருவம் வந்தபின்!? நானொன்றும் விபரம் தெரியாமல் பேசவில்லை! எனக்கும் அம்மா ரகுமாயி இருக்கின்றாள். எல்லோருக்கும் அம்மா தான் என்று எனக்குத் தெரியும் இல்லையென்று யாராவது கூறுங்களேன்!

இன்றுள்ள மானிடக் கூட்டமென்றால் தாயார் சன்னதியிலும் சாத்து முறை சம்பிரதாயத்துடன் சேர்ந்தே செல்வச்சீர் கேட்கும் புலம்பல் சர்க்கரை பொங்கலில் நெய்யாய் பிசுபிசுக்கும். தடவுவதற்கு கை தூண் தேடும்.

சிறுமி ஸ்ரீ ஜனாபாய் தனியாக பாண்டுரங்கனையே பார்த்துக் கொண்டிருக்கின்றாள். ரகுமாயி; பக்தர் நாமதேவர் வீட்டில் வேலை செய்ய ஆரம்பித்து விட்டாள்.

நாமதேவர் சிறந்த ஹரி நாம பக்தராக அறியப்பட்டவர். ஊரறிய எளிய வாழ்வில் பெரும் மகிழ்வில் தூயபக்தராக வாழ்பவர். அவரது துணைவியார் தன் நலத்தைவிட தன் கணவர் நலத்திற்கு மட்டும் கவலைபடுபவள். அதற்காக பகவானிடம் கூட கோபித்துக் கொள்வாள். இப்படித்தான் கணவன் மனைவிக்குள் சண்டைவரும். மஹாலஷ்மி கடாக்ஷம் இருக்குமிடம் எல்லா நலமும் வளமும் நிறைந்ததாக இருக்கும் என்பது எவ்வளவு நிச்சயமோ அதே விதத்தில் தாயாரே வந்து வீட்டுக்குள் அந்த விட்டுப்பிள்ளைகள் போல் வளைய வந்து கொண்டிருந்தால்; அம்மாவைக் கடந்து ஜடச் செல்வத்தை எந்த குபேரனும் வழங்கிட முடியாது. ஸ்ரீ ஜனாபாய் பாண்டுரங்கனின் சன்னதியில் பாடிக் கொண்டிருக்கின்றாள். இரகுமாயி, நாமதேவர் வீட்டில் உட்கார்ந்து கொண்டாள். வீடென்றால் சுவர்களும் கூரையும் தானா... அதுதான் அங்கே ஏனோ தானோ என்றிருந்தது. ஆனால் காற்றோட்டத்திற்கும், வெளிச்சத்திற்கும் தட்ப வெப்பநிலைக்கும் மனதார சுகமாயிருப்பதற்கும் எந்த குறையும் கிடையாது. நாமதேவரை பாண்டுரங்கனிடம் அனுப்பிவைத்தால்தான் நாளை துவாதசிக்கு ஏதேனும் கிடைக்கும் என்பது இல்லத்தரசியின் ஏக்கம். இப்படி ஒரு நிகழ்வை உண்டுபண்ணத்தான் ருக்மினி தேவி வீட்டுக்குள் வந்து உட்கார்ந்திருக்கின்றாள். சிறுமி ஸ்ரீ ஜானாபாயியின் மழலைக்குரலிசையில் லயித்திருக்கின்ற பாண்டுரங்கனும் நாமதேவர் வரவை; ஏனோ இன்று வழக்கத்தை விட ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றான்.....

நாமதேவர் ஆலயத்தினுள் பிரவேசித்த வேளையில் வீட்டிலிருந்து அனுப்பியது தன் துணைவியா? இல்லையே! அழைத்தது பண்டரிநாதன் அல்லவா என்று உணர்ந்தார்.

பண்டரிநாதனின் செல்லச் சிறுமி ஸ்ரீ ஜனாபாய் திவ்ய மங்கள ரூபனாக நிற்கும் பாண்டுரங்க விக்ரஹத்தின் முன்பு தனது இனிய குரலினால் பாடல் பாடித் துதித்து நிற்கின்றாள்.

பெற்றோருக்கும், உற்றோருக்கும் ஊராருக்கும் பதில் சொல்லி; அவர்கள் ஆசியுடனும் அனுமதியுடனும் கோவிலிலேயே வசிக்கத் தலைப்பட்ட குழந்தை ஸ்ரீ ஜனாபாய் பாடும் பாடல் கேட்ட நாமதேவர் மெய் மறந்தார்.

எங்கோ தவறவிட்ட பெருநிதி தன்னருகில் தடுக்கியிருக்கின்றதுபோல் உணர்ந்தார்.

நடந்தது ஏதும் அறியாத அவர் அவளை நோக்கி, "அம்மா! நீ யார்? ஏன் தனியே நிற்கின்றாய்?" என்றார்.

அடுத்த இதழில் பார்ப்போம்.....

திரிலோக சஞ்சாரி
நாரதர்



நமக்கு வந்த வாழ்வுதான்

தை வீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா
மாமேயே ப்ரபத் யந்தே மாயா மேதாம் தரந்தி தே

ஸத்வகுணம், இரஜோகுணம் தமோகுண மயமான இந்த தேவ மாயை கடத்தற்கரியது. என்னையே சரணமாக அடைபவர்களே இந்த மாயையைக் கடக்கிறார்கள்.

பாரத புண்ணிய பூமியில்தான் குணங்களற்ற தூய மனிதர்கள் தோன்றுகின்றனர். அவர்களால் சகல தெய்வங்களுக்கும் கட்டளையிட இயலும். அத்தகைய செல்வங்களை இழக்கும் வாழ்வை வாழும் நாம் வாசிப்புக்களில் மட்டும் பெருமைப்பட்டுக் கொள்ளும் நமக்கு, வந்த வாழ்வுதான்.!

திரிலோக சஞ்சாரி
நாரதர்

கிருஷ்ணவர்ணம் த்விஷக்கிருஷ்ணம்
ஸாங்கோ பாங்காஸ்த்ர பார்ஷதம்
யக்ஞை:சங்கீர்த்தப்ராயைர் யஜந்தீஹி
ஸீமேதஸ
- ஸ்ரீமத்பாகவதம் - 11,5,29.

"இக்கலியுகத்தில் தமது சகாக்களுடன் தொடரப்பட்டவராய்த் தோன்றும் பகவானை சங்கீர்த்தன-யக்ஞத்தால், நற்புத்தியுடையோர் வழிபடுவர்."

ஸ்ரீமத்பாகவதத்தில் கூறப்பட்டுள்ள இந்த தகவலின்படி ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவால் தொடங்கிய ஹரே கிருஷ்ண மஹா மந்திர வேள்விதான் கலியுக தர்மம். யுதிஷ்டிரர் பாரதத்தினை தலைமையிடமாகக் கொண்டு அகில உலகத்தையும் ஆட்சி செய்த காலம்!

இன்று 'ஆப்ரிக்கா' என்றழைக்கப்-படும் தேசம்,அன்றும் மிகப்பெரிய அடர்ந்த முட்களும் புதர்களும் நிறைந்த வனப்பகுதி; அங்கே முடிசூடா மன்னன் மஹோத்கஜன்.

சராசரி மனிதன் எவனும் நுழைய பயப்படுகின்ற காட்டின் பகுதிகளும் கூட 'மஹோத்கஜன்' விளையாடும் இடங்கள்தான்.

காட்டு மக்களுக்கு; நாடு என்கின்ற பகுதிகள் கிடையாது அதை அவர்கள் விரும்புவதுமில்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாக ஐந்தாறு குடும்பங்கள், அவர்களின் குடில்கள்தான் ஒரு கிராமம். .இதைப்போல் பல கிராமங்கள் நாடெங்கிலும், சிதறிக் கிடக்கும். ஒரு கிராமவாசி இன்னொரு கிராம மனிதனை அவன் வாழ்நாளில் ஒருமுறை சந்தித்தால் அதிசயம் தான். முட்புதர்களால் சூழப்பட்ட பீடபூமியில் இதுவே அதிகம். ஆனால் பூமி முழுவதும் ஆள்கின்ற பாரதம் பற்றிய அறிவு மட்டும் உலக மனிதர்கள் அனைவருக்கும் இருந்து நேசித்திருக்கின்றார்கள்.

இஷ்வாகு குலமன்னர்கள், ரகு குல மன்னர்கள், பாண்டுவின் காலம், திருதிராஷ்டிரர் மற்றும் துரியோதனன்;அதன் பின்னர் பாண்டு புத்திரர், மஹாராஜா யுதிஷ்டிரர் என்றழைக்கப்படும் 'தர்மராஜன்' ஆகிய தலைமை மாற்றங்களை எல்லாம் மற்ற நிலப்பகுதி மக்களிடம் பாரதம் பற்றிய உயர்வை மாற்றவில்லை.

மஹோத்கஜன் வசிக்கும் ஆப்ரிக்காவும் அப்படித்தான். அப்பகுதியில் அவன்தான் முடிசூடாமன்னன். காட்டு இன மக்களின் வாழ்வுக்கு ஆதாரம் அவர்களுடைய கானகமே! அவர்களின் உயிர் வாழ்வுத் தேவைகள் எல்லாம் அவரவர் வசிப்பிடங்களிலேயே கிடைக்கின்றன.

✍ "பாரத மக்கள்தான் தேவதைகளுக்கு ஆணையிடுகின்றனர். அவர்கள் தான் பூமியில் நம் வாழ்வுத்தேவைகளை வழங்கி நம்மை பாதுகாக்கின்றார்கள்" என்று உணர்ந்திருந்தார்கள். என்றென்றும் உலக நன்மைக்காக பாடுபடுகின்றவன் பாரதன்தான். எங்கே பிறந்து வாழ்கின்றோமோ அங்கேயேதான் உயிர்விட்டு; உடலைச் சாய்க்கவும் காரணங்கள் இருக்கின்றன. அங்கிருக்கும் வன விலங்குகளினாலேயே அவர்கள் வாழ்வும் முடிகின்றன. வேறு ஆபத்துக்கள் எவையும் இல்லை. விலங்குளிடமிருந்து தப்புவதும் வெல்வதுமே வீரம். உயிர் வாழ்வின் யுத்த பூமியில் மஹோத்கஜன் மாவீரன். 'சங்கு' எனும் சின்ன கிராமவாசியின் மகன். அவனது வீரத்தினால் காட்டின் வேறு கிராமங்களிலும் பெயர் பெற்றுவிட்டான். வாலிபனாகியதும் அவனது கிராமத்தை விட்டு கானக தேசமெங்கும் திரிந்தான். முறுக்கிய இரும்புக் கம்பிகளை ஒத்த உடல். சுருள் சுருளான கேசங்கள், கனமான நாசியும், பருத்த உதடுகளும், சிறுத்த கூர்மையாய் பார்வையுடைய கண்களும் கொண்டவன். இவ்வாறான உடலமைப்பு ஆப்ரிக்கர்களுக்கே உள்ள வனப்பு. நம் மஹோத்கஜன் சிங்கத்தின் வலிமையும், கரடியின் தந்திரமும், நாகத்தின்

சீற்றமும், நிறைந்தவனாயிருந்தான். பதினான்கு வயதில் ஒரு பலம் கொண்ட சிங்கம் தன் முழு ஆற்றலுடன் அவன்மீது பாய்ந்து அறைகின்றதில் அதிர்த்து நின்று அதன் தாடைகளைக் கிழித்து விட்டான்.

மஹோத்கஜன் அவனது தேசம் முழுவதும் திரிவான். எந்த கிராமத்திலும் அதிதியாகக் கொள்கிறாயா? அல்லது யுத்தம் புரிகின்றாயா? என்று அறைகூவுவான். எவரும் அவனை எதிர்க்கத் துணிய மாட்டார்கள்.

பாரதத்தில் மஹாராஜா யுதிஷ்டிரரின் அஸ்வமேத யாகத்திற்குச் செல்ல வேண்டும் என்கிற ஆவல் அவனுக்குள் மூண்டது.

ஆப்ரிக்க வன வாசிகளில் பாரதபுண்ய யாத்திரை என்பது இதற்கு முன் யாரும் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. மஹோத்கஜனுக்கு இந்த யோசனை வந்ததும் அவர்களின் இனத்தவர்கள் அனைவரும் மகிழ்ந்தனர் வியந்தனர். மிகவும் விருப்பத்துடன் தங்களிடமிருந்து மதிப்பு மிக்க பொருட்களை வழங்கினார்கள்.

பாரத வாசிகள் தேவர்களின் மகிழ்ச்சிக்கும் அன்புக்கும் உரியவர்கள். அவர்களுடன் யுத்தம் புரிவது பாவம். நிந்திப்பது நரகத்திற்கு வழிவகுக்கும் என்று நம்பினார்கள். (இக்கருத்தினை 'பக்தி' என்றோ, மூடநம்பிக்கையென்றோ கருதினாலும் எனக்கொரு நஷ்டமுமில்லை)

எவ்வாறாயினும் பாரதத்தின் பண்பும் தெய்வீக ஆற்றலும் வித்யை (கல்வி)யும் மற்ற பகுதியில் வசிக்கும் மானிடர்களின் வணக்கத்திற்கு உரியவை என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

பாரத நாட்டின் மன்னர்கள் அடிக்கடி யாகங்கள் செய்வார்கள். அரசனுக்கும் மக்களுக்கும் பூமியிலும் மற்ற உலகங்களிலும் வசிப்பவர்களின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு யாகங்களை நடத்துவதிலேயே வாழ்நாள் கழியும். இதில் அழிவும், போராட்டமும் பற்றி சிந்திக்கக் கூட நேரமிருக்காது. எந்நாட்டவரும் பாரதத்திற்கு கப்பம் கட்ட தவறியதேயில்லை. அவ்வாறு கப்பம் செலுத்துவதை தங்களின் கௌரவமாகவே கருதினார்கள் எனும் போது எதிர்ப்பதாவது!

இப்பொழுது 'தருமர்' ராஜஸீய யாகம் ஆரம்பித்திருக்கின்றார். அது சாமான்யமானது அல்ல. எந்த சக்ரவர்த்தியும் கூட இதுவரை நடத்தியிருக்கவில்லை. பூமியெங்கும் உள்ளவாகளையெல்லாம் அழைக்க ஏற்பாடுகள் நடந்தன.

அந்தந்த தேசங்களுக்கு ஏற்றஅளவில் சின்னதும் பெரியதுமான நாவாய்கள் (கப்பல்கள்) அனுப்பப்பட்டிருந்தன. ஒவ்வொரு தேசத்து அரசர்களும் தங்கள் குடும்பத்தினருடனும் முக்கியஸ்தர்களுடனும் உயர்ந்த பல வெகுமதிகளையும் எடுத்துக் கொண்டு வணக்கத்துடன் புறப்பட்டனர். ஸ்வேதத்வீபத்தின் ஆப்ரிக்கா முடிசூடா மன்னனாகிய மஹோத்கஜனும் தனது தேசத்தின் பிரதிநிதியாக யாகத்தில் கலந்து கொள்கின்றதில் மிக்க பெருமிதம் கொணடான். இதுவரை அவன் தன்மக்களைத் தவிர யாரையும் பார்த்தது கூட இல்லை. வளமிக்க நாடுகளையும் மன்னர்களையும் அறிந்திராத சாமான்யமான காட்டுவாசி, விலங்கினம் போல் வாழ்வு கொண்ட இனம் சார்ந்தவன். பாரதத்தின் தெய்வீக வளம் மட்டும் கேள்விப் பட்டிருக்கின்றானே தவிர அதுபற்றிய எந்த அறிமுகமும் இல்லாதவன். தன்னுடன் வர விரும்பிய வாலிபர்களை மட்டும் அழைத்துக் கொண்டான்.

வேண்டிய அளவு செல்வமிக்க பொருட்களை எடுத்துக் கொண்டான். கானக வாசிகளிடம் என்ன இருக்கும்!

யானைத் தந்தங்கள், தேன், அபூர்வமான கற்கள், மணிகள் இவைகளை சேகரித்துக் கொண்டு யாக குதிரையுடன்

வந்த தளபதிகளிடம் தந்தான் (ஆப்ரிக்கா வைரம் இன்றும் புகழ்பெற்றவை). யாக குதிரை தங்கள் எல்லையில் வந்து பெற்றுச் சென்றதும், மஹோத்கஜன் மனம் தவித்தான். தங்களை விட்டு விட்டு கப்பல்கள் செல்கின்றன. எல்லா தேசத்து பேரரசர்களும் பிரமுகர்களும் கப்பல்களில் நிரம்பி இருக்கின்றார்கள். ஆரண்ய மக்களை யாரும் பொருட்படுத்தவில்லை. மஹோத்கஜனால் தன் துக்கத்தை பொறுக்க முடியவில்லை.

முதல்முறையாக வனவாசிகள் ஒன்று கூடினர். மீண்டும் தங்களிடமிருக்கும் மதிப்பு மிக்க பொருட்களைச் சேகரித்தனர். மஹோத்கஜனின் தலைமையில் ஐம்பது பேர்கள் புறப்பட்டனர். எப்படியும் தருமரின் யாகத்திற்கு தாங்களும் சென்றேயாக வேண்டும் என்ற முடிவு. ஆனால் பாரதம் செல்வதற்கு தெரியாது. அங்கே யாரைப் பார்ப்பது? எப்படி எங்கே தங்குவது ஒன்றும் தெரியாது. தங்கள் மொழியைத் தவிர வேறு பாஷையும் தெரியாது. உள்ளுக்குள் மனம் திகைத்தாலும் பாரத புண்ய யாத்திரையின் மீதிருந்த ஆவல் அதிகமாகிக் கொண்டிருக்க தன் மக்களிடம் விடைபெற்று சமுத்திரக்கரை வந்து சேர்ந்தான். அதுவரையிலும் தன் மக்களின் காட்டுத்தனமான நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதே அவனுக்கு பெரும்பாடாகிவிட்டது.

அவர்கள் ஒருவருக்கொருவர் இணக்கமில்லாதவர்கள். எப்படியோ துறைமுகம் வந்தாயிற்று. பாரதத்தின் வேறு படகுகள் இவர்களுக்காகவே காத்திருந்த மாதிரி இருந்தன. பாரதப்படகின் தலைவனிடம மஹோத்கஜன் நாங்களும் யாகத்திற்கு வருகின்றதற்கு அனுமதிக்க வேண்டுமென்றான். படகுத் தலைவன் மிக்க அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்றான். மஹோத்கஜனும் அவன் மக்களும் முதன்முதலாக இப்படி ஒரு உபசரிப்பை கண்டனர். கூசினர்.

காட்டு விலங்குகளை விட மக்களுக்குள் ஒருவருக்கொருவர் பகையுடன் தன் உயிர் பயத்துடனும் வாழ்ந்தவர்களுக்கு பாரதம் பற்றிய அறிவு பிரமிக்கத் தக்கதாயிருந்தது.

'மஹோத்கஜன்' தன் மக்களுடன் பாரதத்தாயின் மண்ணில் கால் வைத்ததுமே விருந்தோம்பலும், நட்புரிமையும், நேசமும் அறிமுகமாயின. தான் கற்பனை செய்து பார்த்ததைவிட பாரதம் புண்ய பூமியென உணர்ந்தான். தங்களது மொழிதவிர வேறு ஒன்றும் அறியாத இம்மக்கள் ஊமைகளைப் போல நின்றனர். எங்கு பார்த்தாலும் ஆச்சரியமும் திகைப்புமாக திணறினர். பிராணிகள் கூட அன்பாக பயமற்றவைகளாக இருக்கும் என்பதை அவர்களால் நினைத்துப்பார்க்க கூட முடியவில்லை. மயில்கள், மான்கள், பசுக்கள், குதிரைகள் மற்றும் வளர்ப்பு நாய்கள் போன்ற சகல மிருகங்களும் மனிதர்களுடன் நெருக்கமாகப் பழகி வாழ்வதைக் கண்களால் கண்டதை நம்ப முடியவில்லை. அஸ்தினாபுரம் வந்து சேர்ந்தனர். எல்லையில் குஞ்ச வனம். அங்கிருந்த சிறு குடிலில் ரிஷி குமாரன் ஒருவன் மஞ்சள் மலரைப் போன்ற சிறுவன் மஹோத்கஜனின் மனம் கவர்ந்தான். அந்தச்சிறுவன் முற்றத்தில் படுத்திருந்த வாலிபமான சிங்கத்தின் மீது அமர்ந்தான். தன் தளிர் கரங்களால் சிங்கத்தின் பிடரியை பற்றி எழுப்பி அதன் மீது சவாரி செய்கின்றான். மஹோத்கஜன் பாரதத்தினர் தெய்வீகமானவர்கள் தான் என்று வணங்கினான். பகை குணம் கொண்ட சிங்கமெனும் விலங்கு குழந்தையுள்ளம் கொண்ட தாய் வாழ பாரதத்தில் தான் இயலும் என்று எண்ணினான்.

நகரத்தின் எழிலையும் மக்களின் மகிழ்ச்சியும் கண்டு கடினமான காட்டு வாசிகளும் கலங்கியிருக்க; விருந்தோம்பலில் தங்களின் வாழ்வையே வழங்கும் பாரத மக்களிடம் எப்படி பேச வேண்டும் என்று அறியாமல் இருந்தனர். இந்திரப்பிரஸ்தம் எவ்வாறு செல்வது. படகுத்தலைவனே இவர்களுக்கு வசதியான

இரதம் ஒன்றை ஏற்பாடு செய்து தந்தான்.

இந்திர பிரஸ்தம் நகரின் எல்லையில் இரதம் நின்றது. இறங்கினார்கள். அலைமோதும் மக்கள் வெள்ளம் நிறைந்திருந்தன! துந்திபி, முரசு போன்ற அதிரும் இசைமுழக்கங்களும் நகரெங்கும் ஒலித்தன. மாடமாளிகைகள், அகன்ற பெரும் வீதிகள் நாற்சந்திகளில் நீரூற்றுக்கள், மலர்க்கொடிகளும், தோரணங்களும் மஞ்சள், சந்தனம், பன்னீர் தெளித்த முற்றங்கள். சாலைகளெங்கும் மக்கள் கூட்டம். யானைகள் மீதும், குதிரைகளிலும் ஒரு ஒழுங்கும் பண்பும் நிறைந்திருக்கக் கண்டான் மஹோத்கஜன்.

மஹாராஜா யுதிஷ்டிரரின் யாகத்திற்கு உலகின் மூலை முடுக்கெல்லாம் இருந்து ஜனங்கள் வந்து குவிந்திருந்தனர். பேரரசர்கள், சிற்றரசர்கள் அவர்களின் சேனைகள், வியாபாரிகள், முனிவர்கள், ரிஷிகள், என அலை அலையாகக் கூட்டம், அனைவரும் யாகசாலைக்குச் சென்று கொண்டிருக்கின்றனர்.

அவரவர் தங்களின் இன மக்களுடன் தங்கியிருக்கின்றனர். விதவிதமான பாஷைகள், பலவிதமான நடையுடை பாவனைகள் அவரவர் கூட்டத்துடன் மகிழ்ச்சியாய் இருக்க இவர்களைக் கவனிப்பார் யார்?

மாமனிதர்கள் மத்தியில் எளியவர்களான இம்மக்களை யாரும் கண்டு கொள்ள முடியுமா? முதல் முதலாக இம் முரட்டு மனிதர்கள் வெட்கத்தையும் பயத்தையும் அனுபவித்தார்கள். வீதியில் ஒரு ஓரத்தில் ஒதுங்கினார்கள். மஹாராஜா யுதிஷ்டிரருக்கு வழங்க வேண்டுமென்று கொண்டுவந்த மூட்டைகள் அவர்களின் மதிப்பு மிக்க செல்வங்கள் இங்குள்ள ஐஸ்வர்யத்தின் முன்பு மதிப்பிழந்தாற்போல தோன்றியது. மஹோத்கஜன் செய்வதறியாது கண் கலங்கினான். அத்தனை மக்களும் இன்பமுடன் உற்சாகமாய் மன்னரைக் காணச் செல்கின்றனர். தாங்கள் மட்டும் தன்னிலை அறியாமல் தத்தளித்துக் கொண்டு நிற்பதில் தாங்க முடியாத துயரம்! ஆனாலும் மகிழ்ச்சியான மங்கள நேரத்தில் மனம் வருந்துவது தகாது என்றும் உணர்ந்தான்.

“நண்பா மஹோத்கஜா” அழைக்கும் குரல் கேட்டு திடுக்கிட்டான். அதுவும் அவர்கள் பாஷையில்! மனிதனுடைய குரலில் கனிவும் கம்பீரமும், இப்படி இருக்குமா? இவனது திகைப்படங்கும்முன்.

“அன்பர்களே! உங்கள் பிரயாணத்தில் சிரமம் ஒன்றுமில்லையே. மஹோத்கஜன் ஏறெடுத்துப் பார்த்தான்.

நான்கு வெண்குதிரைகள் பூட்டிய இரதம். அதை ஓட்டிவந்திருப்பது யார்? இவர்தான் அத்தனை அன்புடன் நம்மொழியில் பேசியவர். மழை மேகம் போன்ற இளங்கருப்பு நிறம். தோளில் புரளும் அழகிய சுருள் கேசங்களுடன் பொன் மகர குண்டலம் இருசெவியில் ஒளிர்கின்றன. அவைகளைக் காட்டிலும் அந்தப் புன்னகை! முல்லைச் சரம்போல் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. இரதத்தில் கம்பீரமாக உட்கார்ந்திருக்கும் இவர் நம்மிடம் தான் பேசினாரா! வைத்த கண் மாறாமல் மஹோத்கஜனும் அவன் தோழர்களும் தங்களை மறந்து பார்த்துக் கொண்டே நிற்கின்றனர். அம் மஹாபுருஷன் கையிலிருந்த கடிவாளத்தைக் கொம்பில் சுருக்கிட்டு மாட்டிக் கொண்டே குதித்து தாயிடம் வரும் இளங்காளைக் கன்று போல் வந்து முன்னால் நிற்கின்றான். மஹோத்கஜனுக்கு மூச்சே நின்றது. இதயம் பட படத்தது. மயிலிறகால் அலங்கரிக்கப்பட்ட மகுடம். எத்தனை மயிற்கண்கள். மயக்கும் மோகனப் புன்னகையுடன், “நான்தான் வாசுதேவன்” ஏற்கனவே, காலங்காலமாக பழகிய நண்பனைப் போல் பாசமுள்ள குரல். ஆப்ரிக்கர்களால் இயங்க முடியவில்லை.

முனிவர்களும் யோகிகளும் கூட புரிந்துகொள்ள முடியாத பரம்பொருள் இப்படி வருவான் என்று காட்டு வாசிகளுக்கு எப்படித் தெரியும்? அவர்களால் செய்யமுடிந்தது ஒன்றுதான். தெருவில் நாற்சந்தியில் இருக்கின்றதையும் மறந்து நெடுஞ்சான் கிடையாக வேரற்ற மரம் போல் அவனது திருவடிகளில் வீழ்ந்தனர். சரணத்தில் விழுந்தவர்களைச் சட்டென்று தோள் பிடித்துத் தூக்கினான். முறுக்கேறிய மஹோத்கஜன் உடல் மென்மையான மலரைப் போலானதாக உணர்ந்தான். தங்களை அனாதைகளாக உணர்ந்த ஆரண்ய வாசிகள் உற்றதொரு துணை கிடைத்ததும் மனம் குளிர்ந்தனர்.

உலகின் பல பாகங்களிலிருந்தும் விருந்தினர்கள் வந்திருக்கின்றனர். பல்வேறு சமயங்கள், பழக்கவழக்கங்கள், வாழும் முறைகள், உணவுகள் அத்தனையும் அறிந்து எவரும் சின்னஞ்சிறு உறுத்தலும் இல்லாமல் அமைதியுடனும், மகிழ்வுடனும் இயல்பாக இருக்க வாசுதேவனால் மட்டுமே கவனித்துக் கொள்ள இயலும். ஒவ்வொரு ஆப்ரிக்கனும் வாசுதேவன் தன்னைத்தான் தூக்கி அணைத்தான் என்றே நம்பினார்கள்.

அவர்களிடம் கண்ணன்,

"நீங்கள் யாவரும் ரதத்தில் ஏறிக் கொள்ளுங்கள். உங்களை வசதியான மாளிகை ஒன்றுக்கு அழைத்துச் செல்கின்றேன். இளைப்பாற்றிக் கொள்ளுங்கள். உங்கள் வசதிப்படி தயாராகுங்கள். யாகசாலைக்கு அழைத்துச் செல்கின்றேன். சாம்ராட் யுதிஷ்டிரர் யாகத்திற்கு வரும் அதிதிகளை உபசரிக்க என்னைத்தான் நியமித்திருக்கின்றார். நான் உங்களின் உற்ற நண்பனாவேன். என்னிடம் நீங்கள் கூச்சப்படத் தேவையில்லை. வேண்டியதைக் கேளுங்கள் நன்றாக! அப்படிக் கேட்காவிட்டால் என்னை நீங்கள் அந்நியனாகக் கருதினீர்கள் என்று நான் நினைத்துக் கொள்வேன்." இரதத்தை செலுத்திக் கொண்டே தீனபந்து எளியவர்க்கு எளியவரான கிருஷ்ணன் கூறுகின்றதற்கு மஹோத்கஜனால் மறுமொழி பகர இயலவில்லை.

நிமிஷ நேரத்தில் அனாதையாகி நின்ற நிலை மாறியது.

இந்த்ரப்பிரஸ்தம், அதன் ஐஸ்வர்யம் வானளாவும் மாளிகைகள், மக்கள் கூட்டம், ஆரவாரம் எல்லாம் மிகச் சாதாரணமானவைகளாகப்பட்டன. தாங்களும் தங்கள் நண்பனாகிய கிருஷ்ணனும் மிக்க மதிப்பிற்குரியவர்கள் ஆகிவிட்டதாக உணர்ந்தனர்.

வனத்தில் சுதந்திரமாகத் திரிந்த சுத்த வீரர்கள் ஆப்ரிக்கர்கள். உடைகள் கூட அவசியத்திற்குமேல் சுமைதான். அணிமணிகளைப்பற்றிக் கேட்கவே வேண்டாம். மாளிகையில் புத்தாடைகளும் அவர்களால் கண்டிராத உணவுகளும் கட்டுப்பாடான நிலையும் அவர்களுக்குப் புதிதுதான் என்றாலும் திருப்தியாக உணர்ந்தார்கள்.

பாரதத்திற்கு வந்ததிலிருந்தே புதுப்புது அனுபவங்கள் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தாலும் வாசுதேவன் அவர்களின் நண்பனாகிய பின்னர் மற்ற எல்லாம் அவர்களுக்குச் சாதாரணமானவைகளாகப்பட்டன.

வாசுதேவன் மஹோத்கஜனுடன் அவன் மொழியிலேயே பேசினான். விளையாடினான். ஆவலுடன் அவர்களை உபசரித்தான். தங்கள் பழக்கவழக்கங்கள் வாசுதேவனுக்கு எப்படித் தெரியும் என்று அவ்வப்பொழுது வியந்தாலும் மஹோத்கஜனும் அவன் மக்களும் வாசுதேவனின் நண்பனாக இருப்பதில் பெருமை.

புத்துணர்ச்சியுடன் யக்ஞ சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களுக்கென அவர்களின் தேசத்துப் பெயர் பொறித்த இருக்கைகள். அவைகளின் வரிசை கௌரவமாக சிற்றரசர்கள் அமரும் உயர் வகுப்பு ஆசனங்கள், ஆப்ரிக்க மக்களுக்கு பாரதம் தரும் மரியாதை காலங்காலமாக இருந்து வருகின்றதுதான். மஹாராஜா "யுதிஷ்திரர்" போன்ற சாம்ராட் ஒருவரின் கவனிப்பில் பாரதம் இருந்த காலம் அது. பாமர மக்கள் தங்கள் கௌரவத்திற்கான ஞானத்தை இழந்த உடன் தனது வாரிசுகளுக்கு துரோகியாக வாழும் நிலைக்கு தன்னைத்தானே ஆளாக்கிக் கொண்டனர். இன்று நம் பிள்ளைகளுக்கு காற்றும், உணவும், தண்ணீரும் கூடத்தர இயலாத துரதிர்ஷ்டம் நம்முடையது தான்! இந்துவாக இந்தியாவில் வாழ்பவன் இறந்த உடலின் வாயில் அரிசியை போடுவான். அந்த அர்த்தம் தெரியாதவன். ஆட்சியில் இருப்பதால் வாழும் போதே வாய்க்கரிசியை வம்பாக வாங்கிக் கொள்கின்றான்.

யாகத்தின் ஒரு பாகம் பூர்ணமாயிற்று. ஆயிரமாயிரம் முனீஸ்வரர்களின் தெய்வீக குரலில் எழுந்த சாமவேத கானம் கம்பீரமாக திக்குகளெட்டும் முழங்கியது.

யக்ஞத்தின் ஆகுதிகளை தேவர்கள் நேரடியாக மனித வடிவிலேயே வந்து பெற்றுக் கொண்டனர்.

மனப்பூர்வமான திருப்தியை அவர்கள் அடைந்தும் கூட (யாகத்தின் பூர்ணத்தை விட மற்ற நிகழ்ச்சிகளையும் காணும் ஆவலில் யக்ஞ சாலையிலேயே இருந்து கொண்டனர். உண்மையில் அவர்கள் தேவ உலகங்களிலிருந்து வர வேண்டியது கூட தேவையில்லை. அக்னி மூலமாக அவிர் பாகம் முழுவதையும் அங்கிருந்தே பெற்றுக்கொள்ளும் வல்லமையுள்ளவர்கள்.

உயர் கிரகங்களில் வாழும் தெய்வீக ஆற்றல் உள்ள தேவதைகளுக்கும் பாரத வாசிகள் மரியாதைக்கு உரியவர்கள் என மஹோத்கஜனும் நேரில் கண்டான். யக்ஞத்திற்கு தேவையான சமித்துக்களையும் சேகரித்துத் தந்தவன் வாசுதேவனே!

காரிய கர்த்தாவும் அவனே!
மேற்பார்வையாளனும் அவனே!

அரசர்களும், ரிஷிகளும், தேவர்களும், முனிவர்களும், சாமான்யர்களும், நாட்டின் பிரஜைகளும் உரிமையுடன் ஸ்ரீ கிருஷ்ணனிடம் கூசாமல் உதவி கோரினார்கள். ஒன்றும் தேவை இருக்கவில்லை! குறைவில்லாத கோவிந்தனை துதிப்பதே தங்கள் வாழ்வு என்று அறிந்து அவனை அழைத்த வண்ணம் இருந்தனர்.

மஹோத்கஜனுக்கு யாகமும், அதன் வைபவமும் கண்களில் படவில்லை. எங்கு பார்த்தாலும் வாசுதேவனாகிய தன் நண்பன் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஊட்டும் உயிரோட்டமே தெரிந்தது. ஸ்யாம சுந்தரனாய் எப்புறங்களிலும் தானே பூரணமாய் நிறைந்திருக்கக் கண்டான்.

ஆசை பயம் பற்று விட்டு விட்ட ரிஷிகளும் கூட இருந்த இடத்தில் இருந்தபடியே ஸ்ரீ கிருஷ்ணன் என்ன செய்து கொண்டிருக்கின்றான் என்பதை அறிய ஆவலுடன் தேடுகின்றார்கள். தங்களின் இன மக்களில் நெருங்கிய உறவினனைப் போலவே அன்புடன் பழகிய வாசுதேவனிடம் மஹோத்கஜனும் அவன் தோழர்களும் உயிருக்கு இனிய சினேகிதம் கொண்டிருந்தனர்.

யக்ஞ சாலையைத் தரிசிக்க தக்க இடத்தில் அவர்களுக்கு வாசுதேவன் வசதி செய்து கொடுத்திருந்தான். அங்கிருந்து அவர்களால் யாக நிகழ்ச்சிகளையும்

மாமன்னர் தருமரின் சபையையும் நன்கு காணமுடிந்தது.

பாரதம் வந்திருந்த அத்தனை மக்களும் மிக்க சௌகரியத்துடன் அமர்ந்திருக்கும் அரங்கம் அது. ஸ்ரீ கிருஷ்ணனால் அனைவரும் பிரியமுடன் கவனிக்கப்பட்டிருந்தனர்.

ஒவ்வொருவரும் தன்னிடம் மட்டும் ஸ்ரீ கிருஷ்ணன் மிக்க வாஞ்சையுடன் இருந்ததாக உணர்ந்து அவ்வாறே நம்பினார்கள். யக்ஞம் பூர்த்தியடைந்தது. முதல் மரியாதை யாருக்கு, யக்ஞ அதிபதி யார்? அவருக்குத்தானே அக்ர பூஜை. அதனை உலகச் சக்ரவர்த்தி யாருக்கு வழங்குவார். அரங்கமே சலசலக்கின்றது. பல்வேறு அபிப்பிராயங்கள், மஹோத்கஜனால் தாங்க முடியவில்லை. சிங்கத்தை வீழ்த்திய அவனது முஷ்டிகள் பரபரத்தன. எந்தப் பேச்சுக்கும் இடமில்லை. வாசுதேவனே முதல் மரியாதைக்கு உரியவன் என்பது ஏன் இவர்களுக்குத் தெரியவில்லை. நல்லவேளை சகாதேவன் எழுகின்றான். நொடியில் அரங்கம் அடங்கியது. கணீரென்ற குரலில், "முதல் மரியாதையைப் பெற்றுக் கொள்ள துவாரகை மன்னன், யதுகுல திலகன் ஸ்ரீ கிருஷ்ணனை அழைக்கின்றேன்" இதை எதிர்ப்பவர்களின் தலைக்கு எமது இடது காலே கிரீடமாகும் என்றும் எச்சரித்தான். ஒரு கணம் அமைதியாய் இருந்தது யாக சாலை. ஜய கோவிந்தா ஜய வாசுதேவா......................என்றதிர்ந்தது. அருகிலிருக்கும் ஒவ்வொருவரும் சமயம், மொழி, உயர்வு தாழ்வு பாராமல் கட்டியணைத்துக் கொண்டனர்.

அகில உலக சக்ரவர்த்தி தர்மராஜா யுதிஷ்டிரர் ஸ்ரீ கிருஷ்ணராஜனை சிம்மாசனத்தில் அமர்த்தி முன்னால் முழந்தாள் படிந்துவிட்டார். பட்டத்து மஹாராணியார் துருபத இராஜகுமாரி திரௌபதி இரத்தினங்கள் இழைத்த பொற்கண்டியை கரத்திலெடுத்தாள். சாய்த்தாள்.

வாசனையுள்ள நிர்மலமான தூயபெருநீர் யமுனைத் துறைவனின் திருவடியில் மங்கல நீர்த்தாரை பொழிகின்றது. மாமன்னர் தருமர் வானளந்த மன்னனின் பாதத்தை இருகரங்களால் வருடிக் கழுவினார். வானிலிருந்து கற்பகத்தருவின் மலர்கள் உதிர்ந்தன.

பூஜையின் நிகழ்வுக்கிடையில் சேதி நாட்டரசன் சிசுபாலன் உறையினின்றும் உருவிய வாளுடன் வெகுண்டெழுகின்றான். படமெடுத்து நிற்கும் நாகம் போல் சீற்றமுடன் அவன் கத்திக் கொண்டிருந்தாலும் எவ்வளவு நேரம் அவ்வாறு கத்திக் கொண்டு இருக்கின்றானோ!. அரங்கத்தில் எவரும் கவனிக்கவில்லை. ஆனந்தத்தில் திளைத்த மஹோத்கஜன் எழுந்து நிற்கும் சிசுபாலனைக் கவனித்தது; அவனும் ஸ்ரீ வாசுதேவனின் உறவினனாக பெற்ற பேறு கருதித்தான்.

சிசுபாலனின் கரகரப்பான கோபக்குரல் சொல்லும் வசைமொழிகள் கண்டதும் பொருள் விளங்காத மஹோத்கஜனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அந்த நீசனை கைகளால் பிடித்துக் கசக்கிவிடத் துடித்தான். முன்வரிசையில் ஆயிரக் கணக்கான மன்னர்கள் நடுவில் இருக்கும் இவனால் முன்னாலிருக்கும் சிசுபாலனை நெருங்கவே முடியாது.

யாக சாலை பேரொளியில் மூழ்கியது. அனைவரின் கண்களும் காண முடியாத வெளிச்சத்தில் இருண்டன. ஸ்ரீ கிருஷ்ணன் மட்டும் தான் தெரிந்தான். அவனது வலக்கரம் உயர்ந்தது. சூரியன் சுட்டுவிரலில் சுதர்ஸனச் சக்கரம் அது. கன நேரத்தில் என்ன நிகழ்ந்தது என்று தெரியவில்லை. பகவான் வாசுதேவனுக்கு ஜே! பயங்கரக் கனவு கண்டு விழித்தது போல் அனைவரும் விழித்து ஜெய கோஷமிட்டனர். சிசுபாலன் தலை துண்டிக்கப்பட்டு கிடக்கின்றது. அவனது தலையில்லாத உடலிலிருந்து கிளம்பிய ஒளி கோபாலனின் சரணத்தில்

ஒளிர்ந்தது.

சபையினர் சந்தோஷத்துடன் கோலாகலமாய் வாசுதேவனுக்கு ஜே! எங்கள் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஜே! என ஜய கோஷம் நிறைகின்றது.

மஹோத்கஜன் அத்தனை வரிசைகளையும் தாண்டி யாக சாலை மேடைக்கு எவ்விதம் வந்தானென்று அவனுக்கே தெரியவில்லை. தங்களின் ஆப்ரிக்காவிலேயே இருப்பதாக எண்ணிக் கொண்டு காட்டுக் களி வெறியாட்டம் அவர்களின் இன வெற்றி நடனம் ஆடுகின்றனர். சபை மௌனமாகியது. துந்துபி மற்றும் மேளங்கள் இவர்களின் ஆட்டத்திற்கே உரியபடி தாளகதியில் இசைக்கின்றதும், ஆட்டமும் கண்டு சபையோர் மெய் மறந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

கார் முகில் வண்ணன் கண்ணன் வனமாலைகள் தோள்களில் புரள்கின்றது. எழுந்தான் ஆப்ரிக்கர்களை நோக்கி நடந்தான். சபையோரின் வியப்பு மேலும் அதிகமாகியது. முரட்டு மரக்கிளை போன்ற மஹோத்கஜனின் புஜத்தில் மலர்க் கொடியென தன் தளிர் கரத்தை வைத்து, "நண்பா மஹோத்கஜா" வணங்குகின்றேன். அக்ர பூஜையின் கண்ணியத்தை பெற்றமைக்காக எனக்கு ஆசி கூறு."

மஹோத்கஜனால் வாய்திறக்க முடியவில்லை. இருகரம் தலைக்குமேல் குவிந்தது. அவன் நினைத்ததை வானம் ஒலித்தது.


வாசுதேவனுக்கு ஜே!

தர்மராஜனின் இராஜஸீய யாகத்தில் முதல் மரியாதை பெற்ற ஸ்ரீ கிருஷ்ணன் தன் அன்பினால் ஆப்ரிக்க மக்களின் ஆசிபெற வேண்டி நின்ற இக்காவியத்தை என்னால் இயன்ற வரை உங்கள் உள்ளம் உணர்ந்து நினைவுகூற எழுதி இருக்கின்றேன். வைகறைபொழுதில் மனதில் இந்நிகழ்வை சிந்தித்தால் வாழ்வில் வழக்குகள் தீரும் என்பது வேதம் சொல்லும் உண்மை.

இந்நிகழ்வுகள் எல்லாம் மகாபாரதம் என்னும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 'மகா' என்றால் 'உயர்ந்த' அல்லது 'மிக உயர்ந்த' என்று பொருளாகும். 'பாரதம்' என்பது மிகவுயர்ந்த இந்தியாவின் வரலாறு ஆகும். சிலசமயம் மக்கள் இவற்றை கற்பனை கதைகள் என்று கருதுகின்றனர். அது அறிவீனமாகும் அவை காலவரிசைக் கிரமப்படி இல்லையென்றபோதிலும், மகாபாரதமும, புராணங்களும் வரலாறுகளேயாகும். அந்தப் பெரிய காலக்கட்டத்தின் வரலாற்றினை கால வரிசைக்கிரமமாக எழுதினால் அது எவ்வளவு பக்கங்கள் ஆகும்? அதனால் மிக முக்கியமான நிகழ்வுகளே தேர்வு செய்யப்பட்டு மகாபாரதத்தில் விளக்கப்பட்டுள்ளன.

குந்திதேவி, ஸ்ரீ கிருஷ்ணர் எவ்வாறு பாண்டவர்களை குருக்ஷேத்திர யுத்தத்தில் காப்பாற்றினார் என்பதைக் கூறி அவரைப் பிரார்த்திக்கின்றாள். "ம்ருதே ம்ருதே (அ)னேக மஹாரதாஸ்த்ரத:" குருக்ஷேத்திரப் போரில் மிகச்சிறந்த வீரர்கள் எனப்படும் மகாரதர்கள் பலர் கலந்து கொண்டனர். அவர்களில் தளபதிகள் எல்லாம் மகாரதர்கள் ஆவார்கள். அர்ஜுனனும் ஒரு மகாரதன்தான். ஆயினும் பீஷ்மர், துரோணர், கர்ணன் போன்ற மாவீரர்கள் முன்பு அவன் சாதாரணமானவனே. ஆயினும் கிருஷ்ணரின் கருணையினால் எனது தாத்தா அர்ஜுனரால் வெற்றிபெற முடிந்தது என்று சுகதேவகோஸ்வாமியிடம் உரையாடிக்கொண்டிருக்கும்போது பரீக்ஷித்து மகாராஜா கூறுகின்றார்.

பண்பின் பலம் ஸ்ரீ கிருஷ்ணரே!



திரிலோக சஞ்சாரி
நாரதர்



ரூபனின் டைரி-5

எனக்கென்ன!...
தொடர்ச்சி

பவது நிஸ்சய - தார்யாத் ஊர்த்வம் சாஸ்த்ர - ரக்ஷணம்

பக்தி சேவை மட்டுமே வாழ்க்கையில் பூர்ணத்துவம் பெறுவதற்கு உகந்தது என்பதை உணர்ந்த பிறகும் ஸ்ம்ருதிகளை ஒருவன் அலட்சியம் செய்யலாகாது.

நாரத பக்தி ஸுத்ரம்-12.

என்னிலிருந்து வேறாக....

மண்ணிலிருக்கும் எவைகளும் விண்ணிலிருக்கின்ற எவற்றுக்கும் வேறானதாகவே இல்லை! மனிதன் மட்டும் வேறானவன் என்பது உண்மை. தரிசு நிலமாக நம் கண்களுக்கும் புலப்படுகின்றது. மழைத் துளிகளை பூமி பெற்றதும் அதனுள் இருப்பதெல்லாம் முளைக்கின்றன. பசுமையாய் அவைகள் அத்தனை காலமும் எங்கிருந்தனவோ அவைகளுக்கும் தெரியாது; நமக்கும் தெரியாது. இவைகளுக்கான கூட்டு இயக்கத்தினை இயற்கை என்று அழைக்கின்றனர்.

இன்னும் ஆழ்ந்து யோசிக்கிறவர்கள் இறைவன் என்கின்றனர். இயற்கையை மதிப்பவன் இறைவனை மதிக்கின்றான். தன்னை மதிக்கின்றவன் இறைவனை ஏற்கின்றான்.

"என்னிலிருந்து வேறாக மற்றவற்றைப் பார்க்கும் பேதமை என்னில் இருக்கும் போது நான் எதையுமே பார்க்கவில்லை."

"என்னிலிருந்து வேறாக இருக்கும் எல்லாவற்றிலும் என்னை நான் பார்க்கும் பொழுது நான் எதையுமே இழக்கவில்லை."

இன்று நாம் வாழும் மடமை வாழ்வில் கடவுளையோ அல்லது பல்வேறு மதங்களும்; பக்தர்கள் என்கின்ற மனிதர்களும் மனுஷிகளும் கண்டுபிடித்துக் கொண்டாடும் ஒரு அனுமானிக்க இயலாத அறிவாற்றலையோ நேரில் காண்பது என்பது நம்ப முடியாத அதிசயம். அப்படி கடவுளை கண்டவர்கள் கதைகளைப் படிக்கும்போது! நம்புவதற்குக்கூட தெம்பில்லை.

அத்தகைய உன்னத அறிவாற்றல் அல்லது கடவுள் என்கின்ற பொருள் பொதிந்த ஒன்றை நபராக நேரில் காண என்னதான் வேண்டும்.

அதைத் தெரிந்து கொண்டதால் தான் அவர்கள் பகவானை கண்டார்கள்; நாம் அவர்களிடமுள்ள தகுதியைப் பெறவில்லை. அதனால் காண முடியவில்லை. அவர்களைப் போன்றதொரு தகுதியை பெற்றுக் கொண்டோமானால் நம்மாலும் பகவானைக் காணமுடியும். இவ்வாறாக நம் வாழ்வின் வளர்ச்சியை அனுபவிக்கலாம்.

மனதை அடக்க முயற்சி செய்வது கடினமான செயல் என்று அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனிடம் கூறுகின்றான். பகவானும் அவன் கூற்றை ஏற்று பதிலுரைக்கின்றார்.

அஸம்ஷயம் மஹாபாஹோ மனோ
துர்நிக்ரஹம் சலம்
அப்யாஸேன து கௌந்தேய
வைராக்யேண ச க்ருஹ்யதே

"மனதை அடக்கமுயல்வது கடினமானது என்பதில் சந்தேகமில்லை." ஆனால் பயிற்சியினாலும் பற்றின்மையாலும் அம்முயற்சியில் வெற்றிபெற இயலும் என்கிறார்.

பயிற்சியை வலியுறுத்த அர்ஜுனனை 'மகா பாஹோ' என்றழைக்கின்றார். சொந்தமான பலமுள்ளவனே! அதாவது இயல்பாகவே அவன் பலசாலி.

அடுத்து "கௌந்தேயா" குந்திமகனே என்றழைக்கிறார். யாருடைய பிள்ளை நீ தெரியுமா! உனதுதாய் குந்திமகாராணி. அவளது வைராக்யம் தூய்மை கடமை தவறாத நிலையை தேவர்களும் போற்றும் பெருமைக்கு உரியவள். ஆகையால் நீ (அப்யாசம்) பயிற்சி செய்யும் பலம் உன்னிடமும் அதில் தளராத திடம் (வைராக்கியம்) அதை தாயிடமிருந்தும் பெற்றிருக்கின்றாய். எல்லாவற்றுக்கும் மேல்.

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்.......

என்று ஸ்ரீ மதி ஆண்டாள் நாச்சியார் சொன்ன சொல்லில் உள்ள அர்த்தம் பிறவிதோறும் நடைபெற்ற மனப் பயிற்சியினால் இறைவனைக் காணும் பேறு பெறுகின்றான் ஜீவன்.

ஸ்ரீகிருஷ்ணன்; தோழனாகிய அர்ஜுனனிடம், "வேதங்களைக் கற்றறிந்தாலும், யக்ஞங்களை நடத்தினாலும், தானங்களைச் செய்தாலும், வேறுகிரியைகளைச் செய்தாலும் உக்கிரமாகத் தவம் புரிந்தாலும், மனிதர்களில் உன்னைத் தவிர வேறு எவரும் இந்த உருவில் என்னைக் காண முடியாது! என்கின்றார். - 11:48.

வேத இலக்கியங்களின் வழி காட்டுதல் இல்லாமல் இறைவனைக் காண இயலாது.

"உயிரோடு உடலில் வாழ்கின்றது" என்பதற்கும் "உடலில் உயிர் இருக்கிறது" என்பதற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன.

உடல் விட்டுப் போனவனையும் வாழ்க என்று சொல்கின்றோம்; அவன் வாழ்கின்றான் என்பது தெரிந்து வாழட்டும் என்று வாழ்த்துகின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

குறள் தரும் உத்ரவாதம். எங்கே நான் நயவஞ்சக நாத்திகர்களாலும், தங்கள் தரித்திரத்திற்கு சாஸ்திரங்களைப் பணயம் வைத்து வாழும் தீயவர்களாலும் தாக்கப்பட்டு வேத இலக்கியங்களை பாராமுகமாய் விட்டு விடுவேனோ என்று மிரள்கின்ற சமயத்தில் "தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்." என்கின்ற அறிவுத் தீபம் ஏற்றியது திருக்குறள். அதனுதவியால் என்னுள் ஞான தீபம் ஏற்றப்பட்டது. அதுதான் தமிழ் வேதமாகிய திவ்யபிரபந்தம்.

இப்பொழுது நம்முன் ஸ்ரீ கிருஷ்ணன் நாம வடிவில் இருக்கின்றான். குந்திமகாராணியின் பிள்ளையாய் நாம் இல்லைதான். தேகம் தந்த பெற்றோர்களுக்கும் தெய்வமாய் விளங்கும் நமது குரு மஹராஜ் இருக்கின்றார். உனது குரு யார் தெரியுமா? அன்று அர்ஜுனனின் முன்நின்று கூறினாரே அதே ஸ்ரீ கிருஷ்ணன்தான். ஆன்மிகத்தந்தை வடிவில் இதோ என்முன்பு நின்று குருவாகவும் நண்பனாகவும் கடவுளாகவும் தெரிகின்றான். நிச்சயம் வேதக்கல்வியால், தான தருமங்களால், வேள்வியால் நாம் இந்நிலையை அடையவில்லை. நம்மைப்பற்றி நமக்குத் தெரியாதா என்ன?

கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனை ஒருமுறை 'ஹே ஸ்வயஸாசியே' என்றழைப்பார். சுயமாக தன்னை நெறிப்படுத்திக்கொள்ளும் ஆற்றல் உள்ளவனே! இப்பொழுது எழுந்திரு, எதிரிகளை வென்று புகழை அடைவாயாக. செல்வம் நிறைந்த ராஜ்யத்தை அனுபவி. இவர்கள் எல்லாம் ஏற்கனவே என்னால் கொல்லப்பட்டவர்கள். நீ நிமித்தம் என்ற ஒரு கருவியாக மட்டும் இரு. கீதை-11:33.

அழிக்கப்பட வேண்டியவர்கள் ஆள்வதற்கு ஆண்டவன் ஒப்புதல் அளிக்கவேயில்லை. "அதர்மம் ஆளத் தொடங்கினால் அதை அப்புறப்படுத்த நான் வருவேன்" என்று கடவுள் சொல்லியிருக்கின்றதை நம்பி வாழ்பவன் மட்டும் நிம்மதியாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றான். பகுத்தறிவு என்கிற பெயரில் பாமரனைத் தோளில் சுமக்கச் செய்பவன் பரிதாபத்திற்கு ஆளாகின்றான்.

பரிகாசத்திற்கும் பரிதாபத்திற்கும் உரிய ஒருவகையினர் ஆட்சியின் கீழ் நாம் வாழவில்லை. அவர்களைப் போலவே உள்ள வாழ்வை அனுபவிக்க விரும்புகின்ற விலங்கினன் தான் வாழ்கின்றான்.

பக்திவாழ்வு வெறும் வாய்ப் பேச்சல்ல; வாழ்வு முறை. தமிழ் படித்தாலும் தமிழில் உள்ள புலால் உண்ணாமை என்கிற ஒரு ஒழுக்கத்தைக் கூட கடைப்பிடிக்கத் தெரியாத மூடர்களால் தமிழைச் சொந்தம் கொண்டாட என்ன உரிமையிருக்கின்றது. தமிழையே தொடமுடியாதவனுக்கு தெய்வத்தின் அருளைப் பெறும் அருகதையேது!

கற்றறிந்தவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கும். அவை அனைத்துமே உயிர்களின் வாழ்வு சிறக்க அவரவர் சக்திக்கேற்ப வழிகாட்டும் பாதைகளாய் இருக்கும்.

என்னை நான் தாழ்ந்தவன் என்று சொல்லிக் கொள்வதில் எனக்கு எந்தப் பெருமையும் வராதுதான். ஏனெனில் உண்மையிலேயே நான் ஒரு மோசமான வாழ்வில் உழன்று கொண்டிருப்பவன்தான். எந்த துணிச்சலில் நான் என்னை மனிதனாக "கடவுள்" என்கின்ற மெய்ஞானம் பேசும் உரிமையாளனாக நடந்து கொள்கின்றேன் என்றால் அதற்கு காரணம் எனது குருவிடம் எனக்குக் கிடைத்த அடைக்கலம்தான் அது. என்வாழ்வில் நிகழ்ந்த அற்புதம்.

மஹத்-ஸங்கஸ் து துர்லபோ
காம்யோ மோகஸ் ச

நாரத பக்தி ஸூத்ரம்-39.

மஹாத்மாக்களின் சங்கம் கிடைப்பதற்கு அரிதானது. புரிந்து கொள்வதற்கு கடினமானது. நெறிவழுவாதது.இப்படித்தான் புரிந்து கொள்ள முடியும். அரிதானதுதான். அப்படி ஒரு மஹாத்மாவைக் காண்பதே அரிது; இதில் சங்கம். அதாவது நட்பு கிடைக்க வேண்டுமென்றால் அவர்களை அடைக்கலமாகக் கொள்வதற்கு நம்மிடம் நமது அபிப்பிராயம் தெளிவாக இருக்க வேண்டும். சுயமதிப்பீடு இருக்குமானால் அந்த மஹாத்மாக்களின் சகவாசம் கிடைக்கும். ஆன்மிகம், அரசியல், கலை இப்படி எல்லா பிரிவுகளிலும் அண்டிப்பிழைப்பது ஜீவனின் சுபாவம். இதில் உன்னதமான ஜீவன் மட்டுமே மகாத்மாக்களின் சங்கத்தை சார்ந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கப்பெறுகின்றான்.

"என்னிலிருந்து வேறாக இருக்கின்ற ஒன்று எனக்கு துணையாக வந்தால் நான் சுகமடைவேன்" என்கின்ற மோகத்தில் மனிதன் தன்னிடமில்லாதது என்று எவனிடம் காண்கின்றானோ அவனைச் சார்ந்து கொள்கின்றான். மனிதர்களில் எவருக்கும் கடவுள் பாரபட்சமாய் நடந்து கொள்வதில்லை. தேவன் தன் சாயலில் மனிதனைப் படைத்தார் என்று கிருஸ்துவும், "துள்ளிவரும் நீரிலிருந்து நாம் உம்மைப் படைக்கவில்லையா? என்று அல்லாவும் கூறுகின்றனர். 84 லட்சம் வகைகளில் (ஒவ்வொரு வகையிலும் எண்ணிலடங்கா வடிவங்கள்) உயிர் வாழிகள் வகை இருப்பதாக வேதக்கணக்கு, நான்கு லட்சம் மட்டும் மனித இனம். 80 லட்சம் வகை உயிர்கள் நீரிலும் நிலத்திலுமாக பூமியெங்கும் விரவிக் கிடக்கின்றன. மாணிக்கவாசகர் எல்லாப் பிறவியும் பிறந்திளைத்தேன் என தன் ஆற்றாமை கூறுகின்றார்.

மனிதனாக உடல் பெறுவதே அரிதானது. புரிந்து கொள்வது கடினமானது என்றால். 80 லட்சம் இனங்களில் உடல் பெற்று மாண்டு மறுபடியும் மீண்டு வந்தவனுக்கு பழைய ஜென்ம வாசனையில் தன்னுணர்வை; இறைவனின் சாயலை பெற

வேண்டியதும் புரிந்து கொள்வதும் கடினமானது. ஒரு தூய பக்தரின் சரணத்தைச் சார்ந்து கொண்டதும் நெறி வழுவாத நிலை, அரிதானதெல்லாம் புரிந்து கொள்ள எளிதானதாகின்றது.

என்னிலிருந்து வேறாகத் தோன்றுவதெல்லாம் என்னில் இருக்கின்றது.

“தன்னுணர்வு அடைந்த மஹாத்மாவிடமிருந்து உண்மை ஞானத்தைப் பெற்றபின் நீ மீண்டும் மயக்கத்தில் விழமாட்டாய். ஏனெனில், இந்த ஞானத்தின் மூலம், எல்லா உயிரினங்களையும் பரமனின் பாகமாக, வேறு விதமாக கூறினால் என்னுடையதாக நீ காண்பாய்.” இவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகின்றார்.

- கீதையில்-4:35.

தன்னுணர்வுப் பாதையில்; தானல்லாத ஒன்றைத் தானாக பாவிக்கின்ற ஒரு மூடாத்மாவை சார்ந்து, உடலைக் கிடத்திக் கொள்பவன் மீண்டும் 80 லட்சம் உடல்வகைகளைப்பெற்று உழல்கின்ற பேராபத்தை சந்திக்கின்றான்.

தன்னிலிருந்து வேறாக இருப்பவற்றிலெல்லாம் தன்னைத் தேடியலைவது தெரியாமலேயே அருவம், பிரம்மம், விஞ்ஞானம், மெய்ஞானம், சூன்யம் இவ்வாறான பல வார்த்தை ஜாலங்களில் இறந்து போவதற்காகவே வாழ்கின்றான். முழுமுதற்கடவுள் ஸ்ரீ கிருஷ்ணரைத் தெரியாதவரையில் ஜீவன் மனித வாழ்வைப் பெற்றதால் வெற்றியடையப் போவதில்லை. அதாவது பிறப்பு இறப்புச் சூழலில் இருந்து விடுதலையடையப் போவதில்லை. உயர்குடிப் பிறப்பென்றால் மட்டும் ஸ்ரீ கிருஷ்ணபக்தி கிடைக்குமென்றில்லை. தாழ்ந்தவன் என்றாலும் ஸ்ரீ கிருஷ்ணன் பிரியத்திற்காளாக மாட்டான் என்பதில்லை.

இப்பொழுது நாம் வசிக்கும் காலம் கலிகாலம். இது மோசமானதல்ல. இதன் தன்மை. மனிதன் மந்த புத்தி, குறைந்த ஆயுள், சண்டைப்பிரியன், துரதிர்ஷ்டம்.

1. மந்த புத்தி; கல்வி, ஞானம், வேத இலக்கிய ஆய்வுச்சிந்தனை எதுவும் தேவையில்லை.

2. குறைந்த ஆயுள்; உடல் வலிமை, செயலாற்றல், கடின உழைப்பு, பொறுப்பான புலனுகர்வு துறவு எதுவும் இயலாது.

3. சண்டைப்பிரியர்கள்; வம்பு வழக்கு, உறவுகளுடன்கூட பங்குப் போராட்டம், இதனால் உலகப்பற்றை உதாசீனம் செய்ய வாய்ப்பு. “துறவுநிலை”

4. துரதிர்ஷ்டம்; ஆள்பவன் முதல் அதிகாரி, அண்டை அயலான் வரை ஆன்மிகத் தலைவன் உட்பட ஏமாற்றுக்காரர்கள்.

ரொம்ப வசதியாய் கிடைத்த வாய்ப்பு, யார் பின்னாலும் போய் ஏமாற வேண்டாம்.ஸத்ய யுகத்திலும், திரேதாயுகத்திலும், துவாபரயுகத்திலும், வாழ்ந்த மகான்கள் அடைந்த அதே இறையருளை கலியுகத்தில் நமக்கு இலவசமாக; சுலபமாக கிடைக்கும் பெரும் பாக்யம் ஹரி நாம ஜெபத்தினால் மட்டும் கிடைத்து விடுகின்றது.

இறைவன் வந்து திருவிளையாடல் புரிந்த இடங்கள் இன்றும் நம்முன் இருக்கின்றது. கிருமிகளைக் கொண்டு கருமிகளால் வழிபாடுகள் தடை செய்யப்பட்டுள்ளது. பகவான் நம்முடன் நாம மாக இருக்கின்றார்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

ஒருமுறை சொன்னால் வணக்கம், தொடர்ந்து சொன்னால் ஜபம், நாள் முழுவதும் சொன்னால் வேள்வி, ஆயுள் முழுவதும் சொல்லி மாண்டால் மனிதவாழ்வு பூரணத்துவம்.

எனக்கு ஆறேழுவயதில் ஒரு நண்பன். பெயர் கண்ணியப்பன். அவனது தகப்பனும் தாயும் நீண்ட நாள் மகப்பேறு இல்லாமல் பன்னிரண்டு ஆண்டுகள் தாம்பத்தியம் தகறாறாக, உறவுகள் மத்தியில் அவமானங்களாய் கழிந்தபின் ஜனித்த செல்லப்பிள்ளை. அன்று நகராட்சியாய் இருந்த மதுரை நகரில் துப்புரவுத் தொழிலாளிகளாய் அந்த தாயும் தகப்பனும் கண்ணியப்பனை கண்ணாகப் போற்றி வளர்த்து வந்தனர். எனது தம்பி மாமாவும்,அக்காவும் தான் கண்ணியப்பனை என் துணைக்கு பள்ளியில் சேர்த்து படிக்கச் செய்தனர். அவன்தான் என்னை முதல் முதலாக மதுரை சுப்பிரமணியபுரம் பிள்ளையார் கோவிலுக்கு அழைத்துச் சென்றவன். இன்றும் அதே பிள்ளையார் இருக்கின்றார்.

என்னிடம் இன்றும் இருக்கும் தெய்வ நம்பிக்கையை நான் தட்டிப்பார்த்தால்; எந்த கேடும் இல்லாத தூய வைராக்கிய பக்திக்கு உரியவனாக என்னை நான் மதிப்பதற்கும்; ஹரியே ஸ்ரீ சைதன்யராக அவதரித்து நடத்திய பாதையில் நான் நடந்து கொள்ளவும், வித்திட்ட "கண்ணியப்பன்" உயர்குடிப் பிறப்பினன் கிடையாது. தங்களை மேல்சாதி என்று சொல்லிக் கொள்ளும் யாரும் அவனை கீழ்சாதி என்று பழித்ததும் நான் பார்க்கவில்லை.

எனக்கு விபரம் தெரிந்த காலத்தில் தொடங்கியும் அதற்கு முன்பும் எனக்குத் தெரியாத ஒன்று ஊடகங்கள் வைத்திருக்கும் பொய்யர்களால் தெரிந்தது.

மேல்சாதிக்காரன் நான் என்று குரைக்கும் மனிதர்களும், உன்னை அவன் கடவுளின் பெயரால் இழிவுபடுத்துகின்றான், அவனையும் அவன் கடவுளையும் அவன் பெண்களையும் நீ சூறையாடு. உன்வீரம் கண்டு அவன் உன்னைத் தலை வணங்கட்டும் என்கிற நயவஞ்சக மனிதர்களும் என்பார்வையில் பட்டதுமில்லை, பழகியதுமில்லை. இதே என் குணம்தான் என்னைக் கடவுளைக் காணச் செய்திருக்கின்றது.

கீதை:3-29

ப்ரக்ருதேர் குண ஸம்மூடா ஸஜ்ஜந்தே குணகர்மஸு
தான் அக்ருத்ஸ்ன-விதோ மன்தான் க்ருத்ஸ்ன வின் ந விசாலயேத்

ஜட இயற்கையின் குணங்களால் மதி மயங்கிய மூடர்கள் உலகியல் செயல்களில் முழுமையாக ஈடுபட்டு பற்றுடையோராகின்றனர். குறைவான அறிவுடன் செய்யப்படுவதால் இத்தகைய கடமைகள் தரம் தாழ்ந்தவையே ஆனாலும் அறிவுடையோர் அவர்களை நிலைபிறழச் செய்யக் கூடாது.

உடல் கடந்து, புலன் கடந்து பார்க்க இயலாதவர்கள் தங்கள் உறவினர்கள், மொழி, இனம், நாடு இவ்வாறாக சொந்தம் கொண்டாடுவதும் அதில் தொண்டு செய்யவும், புகழ்பெறவும், தனக்கு கீழ்படியும்படியான ஊழியர்களையும் செல்வங்களையும் தானே அனுபவிக்கின்ற மூட நம்பிக்கைகளால் ஆளப் படுகின்றதிலிருந்து அவர்களை ஸ்ரீ கிருஷ்ண உணர்வினர்கள் விடுவிக்கப் பாடு பட வேண்டாம் என்றும், அது காலவிரயம். ஏற்கனவே அவர்கள் பகவானால் தண்டிக்கப்பட்டு அந்நிலையில் வாழ்கின்றார்கள் என்பதை தனது பக்தர்களுக்கு அறிவுறுத்துகின்றார். விரயமாக உழைப்பதை விட விநயமாக

உழைப்பது ஸ்ரீ கிருஷ்ணருடன் நமக்கான உறவை உறுதிப்படுத்திக் கொள்வதாகும்.

இருப்பினும் ஸ்ரீ கிருஷ்ண பக்தர்களுக்கு இந்த மூர்க்கர்களுடன் ஏன் சகவாசம் என்றால், எப்படியாவது அவர்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணரைக் காட்டித் தந்து காப்பாற்ற வேண்டும் என்கின்ற கருணையினால்தான். அபாயகரமான இந்த சகவாசத்தை மேற்கொள்கின்றனர். இதன் பொருட்டு துர்கா மாதாவிடம் வேண்டிக் கொள்ளவும் தேவி துர்கையின் "மாயை" எனும் சக்தியை தங்களும் பயன்படுத்தி பகட்டான செல்வச் செழிப்பான ஜடஉலக ஐஸ்வர்யங்களால் ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயத்தை அமைக்கின்றனர்.

உலகெங்கும் ஹரே கிருஷ்ணா கோயில்கள் இருக்கின்றன. எல்லா நாட்டினரும் எல்லா மொழியினரும் ஒற்றுமையாக ஸ்ரீ கிருஷ்ணரின் அன்பினால் ஆனந்தமாக வாழ்கின்றனர். அங்கே ஆண்டவன் பெயரால் யாரும் யாரையும் பழிப்பதுமில்லை பயமுறுத்துவதுமில்லை. இந்த இயல்பான பக்தி கூட அவரவர் அறிவின் தன்மைக்கேற்ற வகையில் ஸ்ரீ கிருஷ்ணர் சேவையினை ஏற்றுக் கொள்கின்றார்.

இம்மண்ணுலகில் நான் மனிதனாகப் பிறவி பெற்றேன். எப்படியெல்லாமோ வாழ எவ்வாறெல்லாமோ முயற்சி செய்தேன். நான் தேடியதும், தெரிந்ததும் அத்துணையுமே சுமை. இப்பொழுது எனக்கென்ன..... ஒரு குறையுமில்லை. மனிதக்கடமை தவறிய குற்ற உணர்வில்லை. நன்றி மறந்தவனாக கடவுள் முன் நிற்கவில்லை. வறுமை வளமை கண்டு மயக்கமில்லை. மற்றவர்கள் எந்தமாதிரியான விமர்சனம் செய்தாலும் எனக்கென்ன....!

............இன்னும் வரும்.

ரூபன்

'அரூபம்' 'அமானுஷ்யம்' 'ஸுக்குமம்' இந்த மாதிரியான ஆற்றல்களை பார்க்கவோ கேட்கவோ விரும்பாதவன். இறைவனையும், தன்னையும் எங்கும் எதிலும் ரூபமாகப் பார்க்க விரும்புகின்றவன்.

'ஆத்மா', ஜீவாத்மா; பரமாத்மா முறையே அணுவடிவிலும், அளவற்ற பேராற்றல் வடிவிலும் பரிணாமிக்கின்றதாக நம்புகின்றவன்.

ஜட உலகில் வாழ ஜடவுடல் (ஸ்தூல உடல்). ஆன்மிகவாழ்வுக்குச் சொந்தமான ஆன்மிக உடல் இடையில் இருக்கும் உணர்வு உடல் தான் ஸுக்குமதேகம். ஜடத்துடன் இணைந்து ஆன்மநிலையை அதாவது தன் ஆதார நிலையை மறக்கச் செய்கின்றது என்று உணர்வு உடலைப் பொருட்படுத்த விரும்பாதவன் இவன். கடவுள் பற்றிய உணர்வுக்கும், ஜடப்புலனுகர்வு உணர்வுக்கும் பெரிய வேறுபாடு இருக்கின்றது. கடவுள் உணர்வுக்கு மனம்' ஜடப்புலனுகர்வு உணர்வுக்கு குணம். குணங்களால் சிறைப்படலாம். மனத்தால் விடுதலை பெறலாம். இதுவே ரூபனின் மனோபாவம். இவனும் உழைக்கவும், குடும்பத்தில் பிழைக்கவும் போராடும் சாதாரண ஜீவன். இவனது வாழ்வும் வார்த்தைகளும் கொஞ்சமேனும் உதவியாக இருக்கும்.



திரிலோக சஞ்சாரி
நாரதர்



திரிலோக சஞ்சாரி
நாரதர்

எப்பொழுதும்......

இப்பொழுதும்......

முப்பொழுதும்.....



ஸத்-சித்-ஆனந்தம்
ஆன்ம உண்மை-அறிவு-இன்பரூபம்

தைத்ரிய உபநிடதம்:

ஸத்யம் ஞானமனந்தம் ப்ரஹ்ம. யோவேத நிஹிதம் குஹா யாம்பரமே வ்யோமன் ஸ: அச்னுதே ஸர்வான் காமன் ஸஹ: ப்ரஹ்மணுவிபஸ் சி தேதி.

★எப்பொழுதும் உண்மை இருப்பாக எங்கும் நிறைந்த எல்லாமுமாய் இருக்கும் ஆன்மா.
★ இப்பொழுதும் கூட வேதசாட்சியாக மனப்பெட்டகத்தில் ஆன்ம வடிவான ஞான அறிவு எனும் இரகசியம்.
★இன்பமே வடிவமாய் அறிவே தன்மையாய் மாறாத நிலையில் முப்பொழுதும் (வாழும் ஜீவன்).

'மனம்' கொண்டவன் மனிதன். தனது உடல் உணர்வும் நுகர்வும் மட்டுமே சிற்றறிவால் உண்டு வாழும் மனிதனுக்கு தன்னடைய மனம் என்கின்ற பொருள் விளங்குவதில்லை. ஆனாலும் அது ஆனந்த வடிவமேயானதினால் மனமில்லாத சிறுமையான விலங்குகளைப் போல் உடற்புலனுகர்வில் மூடாத்மாவாக தோற்றமளிக்கின்றன.

சத்யம் எனும் பதம் எங்கும் எப்பொழுதும் இருப்பாகி இருக்கின்ற ஆன்மாவையும்-சித். சித்தம், அறிவு இது அறிவிக்கின்றதோ அறிந்து கொள்வதோ, அறியத்தக்கதோ இல்லை, இல்லை இல்லவேயில்லை. அதுதான் அது. அது ஸத்யம். ஆனந்தம்; ஆன்மாவின் அடையாளம். இந்த அடையாளம் இல்லாமல் ஆன்மாவுக்கும் அறிவுக்கும் வடிவமே கிடையாது. வடிவத்தின் வழியாக இன்பம் நுகர்வது 'மனம்' இல்லாத 'மிருகம்'. ஹரே கிருஷ்ணா...மனோலயம் மதன மோகனனுக்கு மட்டும். துன்பப்படுகின்றதாக அழுபவன் தனது செயல்களுக்காக வெட்கப்பட வேண்டும். இல்லையேல் அவனும் மிருகம்தான். நாய்களின் ஊளைச் சத்தம் மனிதனுக்கு ஆகாது.

ஒரு வேளை உணவுக்குக் கூட உழைக்காதவனும், உழைப்பதற்காகவே உண்ணாதவனும் ஆன்ம அறிவானந்தத்தைத் தெரியாத அறிவிலி. தன்னைத்தானே அவமதிக்கின்ற செயலுக்காக அழவேண்டும்.

உண்ணக்கூட நேரமில்லாத அவனுக்கு அண்ணாமலை யார் சொன்னாலும் புரியாது. அவரை நினைத்தால் கூட போதும் உருப்படலாம்.

பணம், பதவி, கௌரவம் எனும் மூட்டைகளைக் கட்டிக் கொண்டு அழுபவன் (இங்கே அழமாட்டான்) பொன்னான மனித வாழ்வில் சேர்த்ததையெல்லாம் விட்டுவிட்டு எப்படி சேர்த்தானோ அதற்காக மனித உடலை இழந்தபின் அழுவான்.

தன்னை நம்புகின்றவன் என்றால் ஆன்ம இருப்பை நம்புகின்றவன். தன்னை ஆன்மாவாக அறியமுடியும். எங்கும் உலாவும் 'ஆன்மா' வின் இருப்பைக் காண இயலாதவனால் தன்னை ஆன்மாவாக காணமுடியாத அதிசயம். ஆன்மாபற்றி கேட்கும் செய்தி விநோதமானதாகவேதான் இருக்கும்.

கீதை-2.29: ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகின்றார்

சிலர் ஆத்மாவை ஆச்சரியமாகப் பார்க்கின்றனர். சிலர் ஆச்சரியமாக வருணிக்கின்றனர். மேலும் சிலர் வியப்பாகக் கேட்கின்றனர். கேட்டபின்னும் புரிந்துகொள்ள இயலாதவர்களாக உள்ளனர்.

நிச்சயம் என்றேனும் ஒருநாள்



கீதை:6:44

பூர்வாப்யாஸேன தேனைவ
ஹ்ரியதே ஹ்யவஷோ பி ஸ:
ஜிக்ஞாஸுர் அபி யோகஸ்ய ஷப்த
ப்ரஹ்மாதிவர்ததே

தனது பூர்வ ஜன்ம உன்னத உணர்வின் காரணத்தால், யோகத்தின் கொள்கைகளை நாடாமலேயே, அவன் அவற்றால் இயல்பாகவே கவரப் படுகின்றான். அத்தகைய ஆர்வமுடைய ஆன்மிகி, எப்பொழுதும் சாஸ்திரங்களின் சடங்குகளிலிருந்து உயர்ந்து நிற்கின்றான்.

நாம்தான் நமக்கானதாகவே ‘கர்மா’வைத் துணைக்கு வைத்திருக்கின்றோம். அதில் எழுதுவதற்கும், எழுதியது மாறாமல் நிகழ்வதற்கும் நிச்சயம் என்றேனும் ஒருநாள் இதையெல்லாம் நாமே புரிந்து கொள்வதற்கும் கடவுளிடம் வரம் பெற்றுக் கொண்டுதான் பூமிக்கு வந்திருக்கின்றோம். கர்மாவில் என்னதான் எழுதிக்கொண்டு வந்திருக்கின்றோம்?* எப்படியெல்லாம் எழுதுகின்றோம்?** நமக்கு எதிராக நாமே எப்படி எழுதிக் கொள்வோம்?***

*‘கர்மா’ உள்ளும் புறமும் பதிவு செய்து வைக்கும் மாயத்திரை. நமது உணர்வுகளையும் நம்மால் மற்றவர்களுக்கு ஏற்பட வேண்டும் என்று நாம் விரும்புகின்ற உணர்வுகளையும்



சேர்த்து நிகழ்வுகளை நமக்காக நாம் நமது கர்மாவில் எழுதிக் கொள்கின்றோம்.

இதை ஒவ்வொருவரும் எழுதினால் “தனது விருப்பம்” என்கிறது எல்லோருக்கும் சொந்தமானதுதான்.

நான் எனது விருப்பங்களை எனக்காகவும்; யாரெல்லாம் எப்படி என்னுடன் நடந்து கொள்ள வேண்டும் என்கிற என் உணர்வுகளை அவர்களுக்காக எழுதும் பொழுதில் அவர்களும் அவர்களுக்கான கர்மாவில் அவர்கள் விருப்பங்களை எழுதுவதும் இயல்பு. இவ்வாறான விருப்பங்களின் வாசல் அனுபவிக்கின்ற இச்சைக் கதவுகளால் திறந்து மூடப் படுகின்றன. இவைகளின் “தாளம்” அதாவது சாவி “புத்திகள்”. இந்தச் சாவிக் கொத்து வைத்திருக்கிறது மனம். கட்டாயம் கர்மா மனதைக் கட்டிக் காக்கும். இது கடவுள் தந்த வரம். ஜீவனாகவே கேட்டு வாங்கிக் கொண்டது.

கடவுளுடனேயே இருந்த ஜீவன் கடவுளைப் பார்த்து; உன்னைப் போலவே நானும் அனுபவிக்க வேண்டும் என்கிறவனுக்கும், உன்னைவிட நான் என்னையே வடிவமைத்துக் கொள்ள வேண்டும் என்கிறவனுக்கும், நான் நீயாகவே ஆக வேண்டும் என்கிறவனுக்கும் ஒரே காலம்தான். அதுதான் இந்த கர்மபூமி. இங்கே ஒவ்வொருவனும் அவனுக்காக அவன்

கேள்விகளுக்கு



பதில்

திரிலோக சஞ்சாரி
நாரதர்

வேண்டுமென்கிறவர்களுக்காக அவனவனே எழுதிக்கொள்ளும் கர்ம பந்தங்களால் அவைகளுக்கேற்ற புலனுகர்வு கருவிகளைக் கொண்ட உடல்களும் அவைகளுக்கேற்ற புலனுகர்வுப் பொருள்களுமாக பூமியெங்கும் கர்ம பந்தப் பிறவிகள், மீண்டும் தொடரும் பிறவிகள். உறவுமுறை உள்ள உடல்களும், காலத்தின் அனுமதியளிக்கப்பட்டு பூமியெங்கும் பரந்து பிறக்க நாமே நிர்ணயிக்கின்றோம். இவ்வாறாக நாம் நமக்கான கர்மாவில் எழுதிக் கொண்டேயிருக்கின்றோம். இவற்றில் முரண்பாடுகளால் கலையும் சமன்பாடுகள்; காலம் காலமாகத் தொடர்கின்றதில் நான் எனக்கு ஏற்பில்லாததை எப்படி எழுதியிருக்க முடியும் என்று சந்தேகிக்கின்றோம். துயரமான உணர்வில் ‘எல்லாம் என் கர்மா’ என்று தலையில் அடித்துக் கொள்கிறோம்.

கர்ம பூமிக்கு வந்த மனிதன் தனக்கான வாழ்வை எழுதியதற்குப் பெயர் கர்மா, இறைவனே இந்த கர்மபூமிக்கு மனிதனாக வர வாழ எழுதிக் கொண்டால் அது ‘தர்மம்’. அதுதான் வேதம்.

இறைவன் வாழ்ந்தது வேதம். எல்லா மனிதர்களுக்கும் பொருந்தும்.

மனிதன் வாழ்ந்த ‘கர்மா’ வேறு எந்த மனிதனுக்கும் பொருந்தாதது. தனக்கே பொருந்தாத வாழ்வு வேறு யாருக்குத்தான் பொருந்தும். எதற்கும் ஒரு விலை தர வேண்டும் என்கிற எண்ணம் துளியாவது நெஞ்சில் இருக்க வேண்டுமெனில்; இந்த வாழ்வும் வளமும் எனக்கு மட்டும் சொந்தமில்லை என்போன்ற ஜீவர்கள் அனைவருக்குமே தான் சொந்தம். இந்த நினைப்புதான் ஈரம், அன்பு.

தங்கம், வைரம் மற்றும் செழிப்பான மண்ணும், கனிமங்களும் தனிமங்களுமாக குறையில்லாத உலகை நமக்காகவேதான் இறைவன் தந்திருக்கின்றான். இது இரவல் தான் என்றாலும்; எங்களுக்கேதான் என்று அவனிடம் முறைத்துக் கொண்டாலும், பொறுத்துக் கொள்ளும் இறைவனை மறுத்துக் கொள்ளும் கேடான மானிடர்களுடன் வாழத்தான் வேண்டுமா? நிச்சயம் வாழத்தான் வேண்டும்.

மொழியோ, தேசமோ, நேசிப்பவன் போராடமாட்டான். உரிமை, அதுவும் பொய்யுரிமை பாராட்டும் போர்க்குணம் கொண்ட அயோக்கியர்களை தலையென்று தலையில்லாதவன் கொண்டாடுவதும் திண்டாடுவதும் வரலாறு சொல்லும் காட்சிகள்.

ஆடுவதும் பாடுவதும், ஆனந்தமாக நினைத்
தேடுவதும் நின்னடியார் செய்வது பராபரமே!

என்று இலக்கணம் கூறுவது போல் ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும் இறைவனைக் கண்ட மெய்யடியார் பலர். ஆனால்,

“கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறிவாரை”

என்று மாணிக்கவாசகப் பெருமான் கூறியது போலக் கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர். தேடுவதும் தேடிக் காண்பதும் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர் பலர். திருக்குறளை எழுதியவர்களையும், திவ்யபிரபந்தங்களை எழுதியவர்களையும் தரம் பார்க்க இனம் பார்க்க நல்லொழுக்கம் உள்ளவன் துணியமாட்டான்.

நாம் எந்த நாட்டிலும் எந்த மொழியிலும் பிறக்கலாம். ஒரு மனிதன் எல்லா ஜீவர்களையும் நேசிக்க மட்டுமே எல்லா மதங்களும் கற்றுத்தருகின்றன.

“தேடிக் கண்டுகொண்டேன்-திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை-என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்!”

இவ்வாறு பாடுவது சிவநேசச் செல்வர். இவரைப் போலவே ஒருவர் பெரியவாச்சான் பிள்ளை என்னும் பெரியவர். முத்தும் பவளமும் கலந்தது போன்ற மணிப்ரவாளம் நடையிலே இவர் நாலாயிரத் திவ்ய பிரபந்தம் எனும் தமிழ் வேதத்தின் உரையியற்றினார்.

ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களினாலேயே ‘பாசுரப்படி இராமாயணம்’ என்று இவர் இயற்றிய இராமகாவியம் மனப்பாடமாக படித்துக் கொண்டு பாராயணம் செய்யத் தகுந்தது. பகவானின் பிரதிநிதிகளாலேயே இராமாயணம் பாசுரப்படி நமக்கு கிடைத்தது நம் பாக்கியம்.

இராமாயண மகா காவியத்தை முழுவதுமாக படிக்க இயலாதவர்கள் நாம். அதன் ஸாரம் குறையாமல் அப்படியே இராம சரிதம் நமக்கு முழுப்பலனும் தர வேண்டும் எனும் கருத்தில் ‘பாசுரப்படி இராமாயணம்’ இயற்றியவர்; பெரியவாச்சான் பிள்ளை.

“பகவான் இராமனாக அவதரித்த பொழுது வேதம் இராமாயணமாக அவதரித்தது”,என்பர். நம் கர்மாபடி வாழ்க்கை இருந்தாலும் ஒருமுறை இராம சரிதம் பாராயணம் செய்து மொத்த கர்மாவையும் புனிதப்படுத்தி விடலாம்.

நமது வாழ்வில் நமக்கென ஒரு ஆன்மிகப் பாதை. நம் கண்களில் நீரை நிறைக்கும் அளவு தயவு காட்டும் குருதேவர் உடன் வருகின்றார். என்ன கர்மாவோ தெரியவில்லை முன்னும் பின்னுமாக வருகின்றவர்களுடன் வெக்கங்கெட்ட வாயாடல் தேவையா? ஒரே குடும்பத்திற்குள் ஒவ்வொரு செயலும் மனித பிறவி கிடைத்ததை வீணடிக்கும் விதம் அவலம். ஒரே ஒரு முறையாவது நான் என்னை சரியாக வாழ வைத்துக் கொள்ளவில்லை என்று நினைக்கின்ற மாதிரியான நிகழ்ச்சிகள் நிற்கட்டுமே!

ஏதாம் விபூதிம் யோகம் ச மம யோ
வேத்தி தத்வத:
ஸோ ஸவிகம்பேந யோகேந யுஜ்யதே நா
அத்ர ஸம்ஸய:

எனது வைபவங்களை உள்ளது உள்ளபடி எவன் அறிகின்றானோ அவனே பக்தி யோகத்தில் உறுதி கொண்டவன் ஆவான் இதில் சந்தேகம் இல்லை.
கீதை:10:7.

எந்த வைபவங்களைச் சொல்கின்றார் என்றால். நான்கு ரிஷிகள் அடுத்து ஏழுபெரும் முனிவர்கள் மனு இவர்கள் எல்லாம் பகவானது மனத்திலிருந்து தோன்றியவர்களே. அவர்களிடம் இருந்து தோன்றியவன் மனிதன். இந்த வைபவம்தான் அசையாத பக்திதரும் யோகம்.

‘பக்தி’யே பண்ணத் தெரியாத நம் இன்றைய வாழ்வுமுறையில் புலன்களால் அனுபவிக்கின்ற பகட்டுத்தனத்தில் பக்திவாசனை ஏதோ பூர்வ புண்ணியத்தால் நுகர முடிகின்றது. நிச்சயம் என்றேனும் ஒரு நாள் பக்தி யோகத்தை எட்டி விடலாம்.

நாம் நாம் அகாரி பஹுதோ நிஜஸர்வ-
சக்திஸ்
தத்ராதாபிதா நியமித: ஸ்மரணே ந கால:
ஏதாத்ருஸி தவ க்ருபா பகவன் மமாபி
துர்தைவம் ஈத்ருசம் இஹாஜனி நானுராக:

எம்பெருமானே, உமது திருநாமம் மட்டுமே அனைத்து ஜீவன்களுக்கும் நன்மை அளிக்கக் கூடியதாகும். இவ்வாறாக ‘கிருஷ்ணா, கோவிந்தா’ என ஆயிரக்கணக்கான பெயர்களை உடையவராக இருக்கின்றீர். இத்தகைய

திரிலோக சஞ்சாரி
நாரதர்

தெய்வீக நாமங்களில் உம்முடைய தெய்வீக சக்தியை உள்ளடக்கியவராகவும் இருக்கின்றீர். இத்தகைய தெய்வீக நாமங்களை ஜெபிப்பதற்கு கடினமான நிபந்தனை ஏதும் இல்லை. உம்முடைய கருணையினால் உம்முடைய தெய்வீக நாமங்களினால் நாங்கள் சுலபமாக உம்மை அடைந்து விட முடியும். ஆனால் இத்தகைய நாமங்களில் ருசியற்ற நான் மிகவும் துர்பாக்கியசாலியாய் இருக்கின்றேன். இங்ஙனமாக சைதன்ய மஹாபிரபு ஸ்ரீ கிருஷ்ண பிரேமை எத்தகையது என்பதை நமக்கு ஊட்டுகின்றார்.

நமது நிலை இப்பொழுது என்னவாகவாவது இருந்து தொலைக்கட்டும். பணிவு என்கின்ற பண்பு மட்டுமே நமக்குக் கிடைக்குமானால் பேராபத்தில் மாட்டிக் கொள்ளமாட்டோம். பணிவு என்றால் எழுந்து நிற்பது, விழுந்து வணங்குவது, காசுபணங்களைக் காணிக்கை யென்கிற பெயரில் தருவது இப்படியான செயல்களைத் தான் செய்கின்றோம்.

கழுத்தில் துளசிமணி மாலை அணிந்து கொண்டிருக்கின்றேன். நெற்றியில் என் எஜமானன் ஸ்ரீ கிருஷ்ணரின் திருவடிச் சின்னம் எழுதியிருக்கின்றேன். என்னை மக்கள் நான் இன்னாருடைய ஆள் என்பதைத் தெரிந்து போற்றவோ, தூற்றவோ, செய்வார்கள். அதற்காக நான் என்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் தோற்றத்தை மறைக்கவோ, மாற்றிக் கொள்வதோ தேவையில்லை.

“எனது நிலையில் நான் என்னை ஏற்றுக் கொள்வதும் என்போன்று எனது எஜமானராகிய ஸ்ரீ கிருஷ்ணருடன் தொடர்பு கொண்டிருக்கும் யாரும் எனது மரியாதைக்கு உரியவர்களே.”

இப்படி நெஞ்சில் நினைவு இருந்தால் அதுதான் முதல்பணிவு.

நித்யோ நித்யானாம் சேதனஸ் சேதனானாம்
ஏகோ பஹுனாம்யோ விததாதி காமான்

கடோஉபநிஷத்-2.2.13.

பக்தி என்பது எஜமானனுக்கும் பணியாளனுக்கும் இடையிலுள்ள உறவாகும். பணியாளரின் கடமை எஜமானனுக்கு சேவை செய்வதாகும். பணியாளனுக்கு தேவையானவற்றை எஜமானன் அளிக்கின்றார்.

காற்றும் நெருப்பும் ஸ்பரிச உணர்வால் நாம் அனுபவிக்கின்றவை.

‘வெளி’ எனும் விசாலமான ஆகாயத்தில் நமக்கும் கூட உரிமை உண்டுதான். அதில் பங்கேற்கப் பயந்து நமது துணைக்கு நிலத்தையும் நீரையும் தட்ப வெப்பங்களையும் அதன் வடிவங்களான இன்ன பிற உடல்களையும் உறவுகள் என்று பிடித்துக் கொண்டு இறைவனுக்கு எதிராக கிளர்ச்சி செய்பவர்களின் சகவாசத்தில் வாழ்வதால் நம் எஜமானரின் அடையாளச் சின்னங்கள் கூட கேலிக் கூத்தாகின்றது. ஆயினும் தொடர்ந்து அடையாளத்தை தக்கவைத்துக் கொண்டோமானால் என்றேனும் ஒருநாள் பணிவு வராமலா போய்விடும்? நிச்சயமாய் சொல்வதற்கில்லை. மனதார உச்சரிக்கும் மஹாமந்திரம் எனும் ஹரிநாமம் நித்ய பாகவத சேவை (ஸ்ரீமத் பாகவதம், பகவத்கீதை வாசித்தல்) ஏகாதசி மற்றும் வைஷ்ணவ ஆச்சார்யர்களின் விழா நாட்கள் நினைவுகூர்ந்து விரதம் கடைப்பிடிப்பது எல்லாம் சகலவிதமான நன்மைகளையும் அளிக்கவல்லது. எனினும் சாதாரண மனிதர்கள் சகவாசத்தினால் அல்ப சரீர தேவைகள், கௌரவத்

தேவைகளுக்கு அச்சம் கொள்வது பணிவின்மையின் முதல்படி. இந்தத் தளத்தில் இருந்து எத்தனை விரதங்களும், நாம உச்சாடனங்களும் பலன்களை சேமித்து வைத்துக் கொள்ளப்படுமே தவிர பலன்களை அனுபவிக்க அனுமதியிராது. தனது உன்னத தளத்தினை அடையும்வரை கற்பகவிருட்சத்தினை (வைஷ்ணவர்களை) அணுகக் கூட மனமில்லாத நிலைக்குப் பணிவின்மையே காரணம்.

உடல் கொண்ட உலக வாழ்வின் மீது அச்சமோ ஆசையோ வேண்டாம் என்கின்ற முடிவு தெரிந்தோ தெரியாமலோ வாழ்வாக அமைந்த பிறகு அதை ஏற்கத் தெரியவில்லை என்றால் துரதிர்ஷ்டம். முதலில் பணிவு என்னவென்று தெரிய வேண்டும்.

வணிகர் ஒருவர் சிறந்த பண்புகளை உடையவர். தன்னடக்கமும் தெய்வீக செயல்களில் நம்பிக்கையும் கொண்டவர். ஒரு குறிப்பிட்ட வயதில் இல்லற வாழ்வைத் துறந்து திவ்ய தேசங்களுக்குச் சென்று வசிக்க வேண்டும். அங்கேயே வாழ்நாட்களின் கடைசி நேரங்கள் முடிய வேண்டும் என்று விரும்பி பிருந்தாவனம் செல்லத் தீர்மானித்தார். தன் இளம்வயது மகனை அழைத்தார். “மகேஸா, நான் தீர்த்த யாத்திரை செல்லத் தீர்மானித்து இருக்கின்றேன். குடும்பத்தை இனி நீயே பராமரிக்க மொத்த செல்வங்களையும் உனது விருப்பப்படி பயன்படுத்திக் கொள்.” என்றார். “அப்பா நீங்கள் வீட்டிலிருந்தபடியே இறைவனை அடைய முயற்சி செய்யலாமே! உங்கள் பக்தித் தொண்டுக்கு நாங்கள் எந்தவித இடையூறும் செய்யமாட்டோம்.” என்றான் இவ்வாறு நீ சொல்வது ஏற்புடையதில்லை. வியாபாரத்தில் உண்மையில்லாமலும், நட்பில் வியாபாரத்தன்மையுமாய் மனிதர்கள் தங்களை மாற்றிக் கொள்கின்றனர். அதனால் குடும்ப வாழ்வில் இருந்து கொண்டே கடவுள் பக்தி பண்ணுவது இயலாத காரியம். நான் மனித வாழ்வின் பூரணத்துவத்தை அடைவதே பிறந்ததன் பயன்.” என்றார்.

“நல்லது தான் அப்பா, நானும் உங்களுடன் வருகின்றேன். உறவுகள், குடும்ப சுமை இவைகளில் சுகப்படலாம் என்கின்ற விருப்பம் எனக்கும் இல்லை. ‘மனிதவாழ்வு’ குடும்ப பராமரிப்பிற்கு மட்டும் உரியதில்லை என்பதை நானும் அறிவேன். என்னையும் அழைத்துச் செல்லுங்கள்” என்றான்.

இருவரும் பிருந்தாவனம் சென்று வசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். படிப்படியாக தன் தேக சௌகரியங்களைத் துறந்து துறவிகளைப்போல் வாழத் தலைப்பட்டார்கள். தந்தை மகன் பந்தமும் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கியது. இருவரும் இறையன்பர்களாய்ப் பழகி வந்தனர்.

தந்தைக்கு ஒருநாள் யாசகத்தில் இனிப்புப் பண்டங்கள் கிடைத்தன. அவரும் விரும்பி உண்டார். அவர் குடும்பத்தில் இருக்கும்போது சர்க்கரைப் பொங்கலில் விருப்பம் அதிகம். அந்த நினைவு வந்தது.

பன்னிரண்டு வயதிருக்கலாம். ஒரு அழகிய பெண்மணி, ‘ஸ்வாமி தாங்கள் விரும்பினால் நான் உமது ஆசிரமத்தில் ஒருவேளை உணவு சமைத்துத் தருவேன்,” என்று பணிவுடன் விநயமாய் விளம்பினாள். அவள் அழகும் பணிவும் கண்டு அவரால் மறுக்க இயலவில்லை. ஏதோ சொல்லி வைத்தமாதிரி அவளே சர்க்கரைப் பொங்கல்தான் சமைத்து வைத்திருந்தாள். வணிகருக்கு தன் மகன் நினைவு வந்தது. அவனுடன் சேர்ந்து சாப்பிடசெய்யலாமே என்று அவனை அழைத்தார். மகன் வந்தான். “அவலட்சணமாய் பக்தி

பண்ணுவதற்கு வீட்டிலேயே இருந்திருக்கலாமே! என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்." பாச உணர்வில் பாதிவாழ்வைக் கழித்த அப்பா தன் மகனின் சொல்லில் உள்ள நியாயத்தை உணர்ந்தார். கண்களை மூடி ஸ்ரீ கிருஷ்ண தியானத்தில் அமர்ந்தார். மீண்டும் அதே யுவதி வெள்ளிமணியோசை சிணுங்க வந்தாள்." அவர் முன் அமர்ந்து, "தேவரீர்! ஏன் நான் சமைத்துத் தந்ததை இன்னும் சாப்பிடாமல் இருக்கின்றீர்." என்றாள்.

"அம்மா! என்

"மனதினில் பற்றெனும் குற்றம் இருப்பதாக என் மகன் சொன்னதில் இருக்கும் உண்மை தான் எனது தயக்கம்" என்றார்.

அத்தெய்வீகப் பெண்மணி புன்னகைத்தாள் "இது பிருந்தாவனம்." இங்கே அவரவர் அபிப்பிராயங்களுக்கு இடமில்லை. எல்லோரது விருப்பங்களும் நிறைவேறும். ஏற்பதும் மறுப்பதும் உமது விருப்பமல்ல" அந்தப் பெண்மணி ஆதிலட்சுமியாகக் காட்சிதந்தாள். தூய பக்தித் தொண்டு அனுபவிப்பதை அவமதிக்காது. அனுமதித்திருப்பதில் ஆசைப்படும் அவலட்சணம் கூடாது.

பக்தி தேவிக்குப் பணிவிடை செய்ய வேண்டுமெனில் பணிவென்றால் எது என்பதை பவித்ரமான குருவின் கீழ் பணிந்து கிடக்க வேண்டும்.

குருதேவரின் சரணத்தைப் பற்றிக் கொள்ளாமல் பக்திதேவியின் பார்வை நம் மீது பட வாய்ப்பில்லை.

நம்மைப் பொறுத்தவரை கலியுகத்தின் ஆசியில், "ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் வழங்கிய நாம உச்சாடன முறை நமக்குக் கிடைத்த வரப்பிரசாதம்.

சேதோ தர்ப்பண மார்ஜனம்
பவமஹா தாவாக்னி நிர்வாபணம்
ஸ்ரேய கைரவ சந்திரிய விதரணம்
வித்யாவது ஜீவனம் ஆனந்தாம்புதி
வர்த்தனம் பிரதிபதம் பூர்ணாம்ருத
ஸ்வாதனம் ஸர்வாத்ம ஸ்நபனம்
பரம் விஜயதே ஸ்ரீ கிருஷ்ண ஸங்கீர்த்தனம்.

தொடர்ந்து பகவான் நாமத்தைப் பலன் கருதாமல் ஜெபிப்பதனால் பணிவும் பண்பும் வரத்தான் போகின்றது. துவேஷம் இல்லாதிருத்தலே நமது வெற்றி.

நிச்சயம் என்றேனும் ஒருநாள் நானும் வைஷ்ணவர்களின் தாஸனாவேன் எனும் நினைப்பில்

ஹரேகிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

குருவே சரணம்.

நம்மைத் தேடிவரும் தீர்த்தமாக குருமஹராஜ் மனம் குளிர பணிவெனும் பண்பை பெறுவோம்.......




எல்லா புகழும்

ஸ்ரீ குரு கௌராங்கருக்கே!

திரிலோக சஞ்சாரி
நாரதர்


ஸ்ரீ மத் கோதாயாயை நம:
முகில்வண்ணன் பேர் பாட......



முகில் வண்ணன் பேர் பாட......
தகுதியென்ன தேவை.

முகில் வண்ணன் பேர் பாட......
வாழ்வின் நிகழ்வுகள் யாவை.

முகில் வண்ணன் பேர் பாட......
பாவை நோன்பு பாவையருக்காகவா;
பக்தருக்காகவா.

அன்ன வயல் புதுவை ஆண்டாள் அரங்கற்கு
பன்னு திருப்பாவை பல்பதியம் - இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை - பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.


கற்றுக்கறவைக் கணங்கள் பலகறந்து*
செற்றார்திறலழியச் சென்றுசெருச்செய்யும்*
குற்றமொன்றில்லாத கோவலர்தம்பொற்கொடியே!
புற்றரவல்குல் புனமயிலே! போதராய்*
சுற்றத்துத் தோழிமார்எல்லாரும்வந்து *நின்
முற்றம்புகுந்து முகில்வண்ணன்பேர்பாட*
சிற்றாதேபேசாதே செல்வப்பெண்டாட்டி! *நீ
எற்றுக்குறங்கும் பொருளேலோரெம்பாவாய்.



திருப்பாவை பாசுரம்-11.

எனக்கென்ன சொந்தம்......
உங்களால் நானும் கொஞ்சம்
தஞ்சமெனப் பகர்கின்றேன் பரிவுடன்
வாசிக்க வணங்குகின்றேன். அரங்கன்
அடியார்கள் திருவடிகளே சரணம்......
ஒரு துளித் தூசியேனும் வேணும் எனச் சிரம் தாழ்த்தினேன்...
தாளாது மாள மருள்கின்றேன்.
வாழாது போனாலும் அருளென்று
ஆழ்வார்கள் அன்பென்று ஒன்று
உங்கள் கடைவிழியில் காணத்தான்
வேண்டுமென்ற தால் உளறுகின்றேன்,
ஒப்பீராக!

திரிலோக சஞ்சாரி
நாரதர்



திருமகள் தான் பாடினாள்!
திரு வில்லியாழ்வான் பாடிய -
-பல்லாண்டெனும் காப்பறிந்து;
உவந்து வந்து உயிர் காக்கப்
பாடினாள்.!
நாச்சியாராய் நயந்துவந்த பாவை;
மதிநிறைந்த நன்னாளைத் தெளிந்து தந்து
மனுக்குலம் விதிமாற்ற;
நானூறும், பத்தாறோடும்,
ஒரு பாசுரம். பைந்தமிழ் வேதங்கள்
விஷ்ணுசித்தன் வழங்கிய
பாகவதம் பயின்றார்க்குப்
பரிசாக; திருமகளே
தேடிவந்து பாடினாள்.
ஒருமதி நிறைந்த
மனுக்குலத்திற்கு மாநிலம்
விளங்கப் பாடினாள்; பாவைதான்*
யாரென்றறியாத மாந்தரெல்லாம்
தாயே தானெத் தான்*
தெளிந்து வாழப் பாடினாள்-
“திருப்பாவை”யப்பாவைச் சரணடிதொழுதேன்
முகில்வண்ணன் பேர் பாட......
பெரு மாவுரலில் பிணிப்புண்டிருந்து* அங்கு
இரு மாமருதம் இறுத்த இப்பிள்ளை*
குரு மாமணிப் பூண் குலாவித்திகழும்*
திரு மார்பிருந்தவா காணீரே சேயிழையீர் வந்து காணீரே.

ஏன் சொல்லமாட்டீர்கள்! உங்களுக்கென்ன; கலிபுருஷனை யாரென்றாவது தெரியுமா! கருத்துக் குருடர்களும், கயமைத் திருடர்களும், நுனிக்கிளையில் உட்கார்ந்து கொண்டு அடிக்கிளையை வெட்டும் அடிமுட்டாள்கள் உடன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோமே எங்களுக்குத்தான் தெரியும். இந்த யுகத்தின் அபிமானி அவன்தான். ஆனாலும் கலியனை வென்ற கலியன் எங்கள் இராமானுச முனியே! தனியே வேண்டிக் கொணர்ந்த ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய வைபவம்; நாம சைதன்யம் இன்று மூவுலகுக்கும் மணி மகுடமாய் விளங்கும் மஹாமந்திரச் சோலையில் தஞ்சமடைந்துள்ளது மனுக்குலம்.

கண்ணனின் கழுத்தில் அணிந்து இருக்கும் “பூண்”, (பொன் மணிமாலை) அவன் மார்பில் திரியும் அழகைக் காண அழைக்கின்றாள் அம்மா யசோதை. மார்பழகில் மயங்கிய மணிமாலையில் திகழும் அழகு பற்றிச் சொல்லி முடியாது என்பதால் வந்துதான் பாருங்களேன்; இந்தப்பிள்ளை தன் மார் வலிமையில் நூற்றாண்டு மருத மரங்களையே சாய்த்து விட்டான். அதுவும் பெருமர உரலில் கட்டப்பட்டிருந்தும் கூட...! இப்படி ஒரு பிள்ளைக் கடவுளை எங்கே காண்போம்! கண்டால் கலியுக தோசம் காணத் தெரியுமா!

வாழ வழியில்லை. வாழச் சொல்லித்தந்தவன் குறளாய் தந்த வார்த்தைகளுக்கு குரலில்லை. அவன் வடிவைக் கொடும்பாவிக்குப் பொம்மை வடிப்பதுபோல் கல்லில் அடித்துச்சிலை வைக்கும் கபோதிகளின் பிடியில் கண்ணிழந்து நிற்கின்றோம். எப்படித்தான் முகில் வண்ணன் பேர் பாட.......?

திரிலோக சஞ்சாரி
நாரதர்


பகவான் நாமம் பாடும் இடத்திற்குப் போனால் பாடலாம். யாரெல்லாம் பாடுவார்கள். தான்தோன்றித்தனமாய் எனது பாடும் திறனைப்பார் என்பவர்களும், பகவான் நாமம் பாடினால் பாவம் தீரும் வளம் சேரும் என்பவர்களும், என் பக்தி பரவசம் கண்டு பாடும் அடியார்கள் என்னை தங்கள் குருவாக அழைப்பார்கள் என்றெல்லாம் பாடும் அடியார்கள் கூட்டத்திற்குள் விழாமல் ஹரி நாமம் மட்டுமே ஜீவர்களுக்குக் கதி என்று வேதப் பிரமாணத்தின்படி எங்கே நாம ஸங்கீர்த்தனம் நிகழுமோ அங்கே சென்றால் நமக்குப் பாடத்தெரியவில்லையென்றாலும் சொல்லவும் நினைக்கவும் சொல்லித் தருவார்கள். முழுமையான கிருஷ்ண உணர்வில் லயித்திருப்பவரின் வார்த்தைகளில் நமது எண்ணமும் செயலும் ஸ்ரீ கிருஷ்ணரின் பக்கம் திரும்பும். அவரவர் சொந்த அனுபவத்தில் உணரலாம். ஆசையும், பயமும் இருப்பவராய் நாம் இருந்தால் பொறாமையில் ஸ்ரீ கிருஷ்ணரையும் பக்தர்களையும் நினைப்போம். வீரமும், நெஞ்சில் ஈரமும் இருந்தால் அவர்களுடன் நட்பு பாராட்டுவோம். அறிவும் அன்பும் இருந்தால் உடனடியாக அந்த சத்சங்கத்தில் இணைந்தேவிடுவோம். இவ்வகையான குண அடிப்படையில் நிரந்தரமானவன் நான் என்கின்ற ஜீவன் நாம் தான்; என் நலம் விரும்பும் நண்பன் ஸ்ரீ கிருஷ்ணன். என்னைவிட என்னை அதிகம் நேசிப்பவன் ஸ்ரீ கிருஷ்ணனைத் தவிர இவ்வுலகில் வேறு யாருமில்லை என்று புரியும். இதை அவர்கள் நமக்கு பாடமாகச் சொல்லித் தரமாட்டார்கள் அவர்களுக்கும் இந்த உலகியல் அநாகரிக அதிகார நிர்வாகக் கோளாறுகள் தொல்லைதான். நாம் நமது அவல நிலையை உணராமல் இருக்கும் போது வாழ்வில் ஒவ்வொரு நாட்களும் சுமைதான். ஆனால் அது தெரியாது. அலுவலகம் செல்வதும், சாலை நெருக்கடிகளில் திணறுவதும் ரேஷன் கடையில் காத்திருப்பதும், தண்ணீர் மின்சாரம் பிள்ளைகள் படிப்பு, கோவில் திருவிழா, தொடர்ந்து எல்லா நிகழ்வுகளும் போராட்டம்தான். குடும்ப உறவுகளில் திருமணம், மகப்பேறு, வீடு, தொழில் நிறுவனம், வாகனம் இப்படி வரவு செலவும் ஆக மூச்சுத்திணறும் சூழலை ஏற்றுக்கொண்டு புரட்டாசி, சனிக்கிழமை நெற்றியில் பட்டையாய், கையில் தொன்னைப் பிரசாதமாய் திருப்திப்பட்டுக் கொண்டு, அந்தச் சூழலில் பார்ப்பவர்களுடன் பாவனையில் பாசமாய் புரியாமலே சிரித்துப் பேசி பொழுதைப் புதைத்துக் கொள்ளும்



ஆபத்தில் மாட்டிக் கொள்ளாமல் ஹரிநாமம் பாட சென்றால் அவர்கள் சொல்லாமலேயே வித்தியாசம் தெரிந்து நம் அருமை நமக்கே தெரியும்.

இப்பொழுது பாடலாம். முகில்வண்ணன் பேர் பாட கிடைப்பது என்னவென்பதும் நிகழ்வது என்ன என்பதும் தெளிவாகும். மானிட வாழ்வின் புனிதத்துவம் நம் உறவுகளின் நிலைத்த அன்புநிறையும். வாழ்க்கை நிலையாமை என்றுதான் சொல்வார்கள்; இது என்ன புதுக்கூத்து என்றால். நானா சொல்கின்றேன். ஸ்ரீ கிருஷ்ணன்தான் சொன்னான். அர்ஜுனனிடம் நீயோ இம்மன்னர்களோ இல்லாமல் இருந்த ஒரு காலமில்லை. இனி இல்லாமலிருக்கப் போவதுமில்லை. பல்லாயிரம் பிறவிகளில் நம் பகவான் மட்டும் வருவான் பாசமுள்ளவர்கள் வராமல் போவார்களா என்ன? உடல்கள் மாறிக் கொண்டிருந்தாலும் உள்ளத்தில் ஊற்றாய் ஊறிய அன்பு மாறுமா... அவர்களைத் தான் நாம் இழப்போமோ, காற்று வாசனையை சுமந்து செல்வது போல் ஆத்மாவானவன் அவனது எண்ணங்களைச் சுமந்து செல்கின்றான் என்கின்றாரே! நாம் தான் கொண்டு போக முடியாதவைகளுக்கு ஏன் மல்லுக்கட்ட வேண்டும்? கொண்டு போக

முடிந்ததற்கு முகில்வண்ணன் பேர் பாடலாமே! பிரதோஷம் தவறாமல் போவேன் சனிக்கிழமை தவறாமல் ஆஞ்சநேயரைப் பார்ப்பேன். சஷ்டிவிரதமிருப்பேன் இன்னும் என்னென்ன தெரியுமோ எல்லாம்தான் செய்தேன். இந்த தெய்வீகச் செயல்கள் எல்லாம் சேர்ந்து இன்று முகில்வண்ணன் பேர் பாட கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. இது பாவையருக்கு மட்டுமா? ஆணாய் பிறந்தது என் பாவமா.... பக்தியில்பாட பாவையாயிருக்கனும்னா.... பெரியாழ்வார் பாடினார்; தன்னை யசோதையாகவே பாவித்து. நம் அற்பத்தனத்திற்கு இதெல்லாம் பெரிய விஷயம். ஆனாலும் பிச்சைக்காரன் பாத்திரத்தில் ஒரு பவுண் பொற்காசு விழுந்தால் அதன் மதிப்பு குறைந்தா விடும். நமக்காகத்தான் எந்த விதியும் கட்டளையிடாமல் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மகாபிரபு வந்து தந்திருக்கின்றாரோ முகில்வண்ணன் பேர்பாட.....



ஜெய ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய பிரபு
நித்யானந்த ஸ்ரீ அத்வைத
கதாதர ஸ்ரீ வாசாதி
கௌர பக்த விருந்தா

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

யோகிநாம் அபி ஸர்வேஷாம்
மத்கதே நாந் தராத்மநா
ஸ்ரத்தாவாந் பஜதே யோமாம் ஸ
மே யுக்ததமோ மத:
கீதை -6:47.

"எவ்வித பலனுக்காகவும் இல்லாமல் முழு நம்பிக்கையுடன் என்னில் நிலைத்த மனத்துடன் யோகத்திலீடுபடுபவனே எல்லா விதமான யோகிகளிலும் சிறந்த யோகியாவான் என்பதே என் அபிப்ராயம்."

தொடர்ந்து பார்ப்போம்.......

இரண்டில் ஒன்று......



"நாவுக்கென்ன ருசி-!"

பிருந்தாவனத்தில் ஒரு மஹான். தனது செல்லக்கிருஷ்ணனுடன் வசித்து வந்தார். தனக்கு யாசகமாய் கிடைக்கும் பதார்த்தங்களை பகவானுக்குப் படைத்து உண்பார். ஒருநாள் கண்ணன், அவரிடம் "பாபா, எனக்குச் சாப்பிடவே பிடிக்கவே இல்லை. நீங்கள் தரும் ரொட்டியில் உப்புகூட இல்லை" என்றான். இவர் ஒரு நாளைக்கு ஒரு வீதியில் ஒரு வீட்டில்தான் யாசிப்பார். அன்று கிடைத்த மாவில் ரொட்டி சமைத்துக் கொடுத்திருந்தார். அதைத்தான் கிருஷ்ணன் இப்படிக் குறை சொன்னான். கோஸ்வாமி பகவானிடம், "என் உயிரே நந்த லாலா... நீ என்னிடம் இவ்வளவு கடுமையாக நடந்துகொள்ள கூடாது. நான் மேலும் யாசிக்க எங்கே செல்லமுடியும்? எனக்கு இருக்கும் ஆயுளில் தேகாபிமானத்திற்கு நேரத்தை செலவழிக்க இயலாதவனாய் இருக்கின்றேன்; உங்களுக்கு வசதியான உபசரிப்புகள் உள்ள இடங்களுக்குப் பஞ்சமேயில்லை. அங்கே சென்று விளையாடுங்கள். என்னைச் சோதனைக்கு ஆளாக்காதீர்கள்" என்று சொன்னாரே தவிர மனதிற்குள் மிகவும் வேதனைப்பட்டார். தன்னிடம் இன்னும் பௌதிகச் சுவையிருப்பதால்; பகவான் தன்னை தாழ்ந்த நிலையில் வைத்துக் கொண்டு 'சுவை' தனக்கு வேண்டுவதாகவும் நடிக்கின்றார். என்னைத் தேகச் சிறையிலிருந்து காப்பாற்றுவதற்காக என் கிருஷ்ணன் தன்னைத் தாழ்த்திக் கொள்கின்றானே என்று கண்ணீர் சிந்தினார். நாமெல்லாம் எவ்வாறு சிந்திக்கப் பழகியிருக்கின்றோம்?! பட்சணங்கள், பட்டாடைகள் எல்லாம் பகவானுக்குப் படைத்து பல மடங்கு திரும்பப் பெற்று சுகப்பட எவ்வளவு பேராசையில் அலைகின்றோம். இத்தனைக்கும் பகவான் விருப்பம் பற்றி தெரிந்துகொள்ள கொஞ்சமேனும் செவி சாய்ப்பதில்லை. நாவென்ன செய்யும்? நாமம் மட்டும் சொன்னால்!

திரிலோக சஞ்சாரி
நாரதர்